விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 04 திங்கட்கிழமை (20.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 213




# ஐ.நாவின் இலங்கைப் பிரதிநிதி திடீரெனப் பதவி நீக்கம்




## நாடு திரும்புமாறும் அரசு அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதி தயான் ஜயதிலகவை அரசு பதவி நீக்கம் செய்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை அவருக்கு அனுப்பப்பட்ட தொலைநகலில் பணிகளை ஒப்படைத்துவிட்டு ஆகஸ்ட் 20 ஆம் திகதி கொழும்பு திரும்புமாறு அரசு அறிவித்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தயாரிப்பான நீர்மூழ்கிக் கப்பல் கண்டுபிடிப்பு



56-வது படைப்பிரிவினரும் T-8 படைப் பிரிவினரும் இணைந்து வெள்ள முள்ளி வாய்க்கால் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டிருந்த போது கடற்கரையில் இருந்து 500 மீற்றர் தொலைவில் விடுதலைப் புலிகளின் சொந்தத் தயாரிப்பான நீர்மூழ்கிக் கப்பல் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

முழுக்க முழுக்க உள்ளூர் தயாரிப்பில் விடுதலைப் புலிகளால் வடிவமைக்கப்பட்டுள்ள நீர்மூழ்கிக் கப்பல் பாவனைக்குகந்த நிலையில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

சுமார் 24 அடி நீளமும் 4 அடி உயரமும் கொண்ட இந்த நீர்மூழ்கிக் கப்பலின் மேலதிக விபரங்களை வெளியிட இராணுவம் மறுத்துள்ளது. இருப்பினும் சுமார் 6 பேர் பயணம் செய்யக் கூடிய வகையில் இது அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ந-5)

## மனோ கணேசனின் வாகனம் மீது தொண்டமானின் ஆதரவாளர் தாக்குதல்

(கொழும்பு)

ஊவா மாகாண சபைக்காக நடைபெறும் பிரசார நடவடிக்கைகளின் போது ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் பயணம் செய்த வாகனத் தொடரணி மீது ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்கள் கடுமையான தாக்குதலினை நேற்று முன்தினம் நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆறுமுகம் தொண்டமானின் ஆதரவாளர்கள் நன்கு திட்டமிட்டு நடத்திய இந்தத் தாக்குதலின்போது மனோ கணேசன் அவரது மெய்ப்பாதுகாவலர்களால் அந்த இடத்தில் இருந்து உடனடியாக பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டதால் காயம் எதுவும் இன்றித் தப்பித்துள்ளார். இருந்த போதிலும் அவரது ஆதரவாளர்கள் பலர் படுகாயமடைந்திருக்கின்றனர். வாகனங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

பசர வீதியில் உள்ள மடுல்சீமைப் பகுதியில் வைத்தே மனோ கணேசன் பயணம் செய்த வாகனத் (12ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றிலிங் சி.டி.எம்.ஏ. இணைப்பு கிளியரன்ஸ் தேவையில்லை

### ரெலிக்கொம் யாழ்.முகாமையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா ரெலிக்கொம்மின் சி.டி.எம்.ஏயைப் பெற்றுக்கொள்வதற்கு இதுவரை இருந்த பொலிஸாரிடம் கிளியரன்ஸ் பெறும் நடைமுறை முழுமையாக நீக்கப்பட்டுவிட்டதாக சிறிலங்கா ரெலிக்கொம்மின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவானந்தன் அறிவித்துள்ளார்.

இன்றிலிருந்து சி.டி.எம்.ஏ. இணைப்புத் தேவையானவர்கள் தமது தேசிய அடையாள அட்டை போட்டோ பிரதியுடன் நேரில் வந்து சிறிலங்கா ரெலிக்கொம்மின் யாழ்.பிராந்தியத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார். (ந)

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் அமைச்சர்கள் குழு இன்று யாழ்.வருகை

யாழ்.மாநகர சபைத் தேர்தல் பிரசாரப் பணிகளை வலுப்படுத்த ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அமைச்சர்கள் குழு இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகிறது.


இக் குழுவில் மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும, ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

யாழ்.வரும் அமைச்சர்கள் குழு இன்று காலை 10 மணிக்கு விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்துகிறது. அத்துடன் யாழ்.வரும் இதர அமைச்சர்களுக்கு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குடாநாட்டு நிலைமைகள் தொடர்பில் விபரிப்பார். (ந-5)

உள்ளே...

✷ தமிழக ஜோதிடர் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் ஆடி மாதப்பலன்கள்.

## ஏ-9 பாதை ஊடாக பயணிகள் சொகுசு பஸ் சேவை



### அடுத்தவாரம் ஆரம்பம்–அமைச்சர் டக்ளஸ்

(கொழும்பு)

மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் ஏ-9 பாதையூடாக அடுத்த வாரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான சொகுசு பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்காக அமெரிக்கா குரல்கொடுப்பதைத் தடுக்க பிரசாரம்

### இலங்கை அரசு தீவிரம்

(கொழும்பு)

அமெரிக்காவுடன் நல்லுறவைப் பேணிக் கொள்ளும் நோக்குடன் அந்நாட்டில் இயங்கி வரும் ஓர் நிறுவனமொன்றிடம் இலங்கைத் தூதரகம் ஆலோசனைகளை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டால் அமெரிக்க அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்கள் மற்றும் விமர்சனங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்பது குறித்து அந்த நிறுவனம் ஆலோசனைகளை வழங்கி (12ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி

தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.எண் 1039 கொழும்பு

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரபாகரன் போரின் இறுதிவரை அமெரிக்காவை உறுதியாக நம்பினார்

## ஆய்வாளர் திருநாவுக்கரசு தமிழகத்தில் பேட்டி

(சென்னை)

பிரபாகரன் அமெரிக்க அரசை உறுதியாக நம்பினார்.ஹிலாரி கிளின்டனிடம் நம் ஆட்கள் பேசி விட்டனர்.ஆதலால் சீக்கிரமே நம் விவகாரத்தில்அமெரிக்காதலையிடும் அதுவரை தாக்குப் பிடிப்போம் என்று சொன்னார்.

ஆனால், இந்தியாவைக் கடந்து அமெரிக்கா உதவ முடியாது என்பதை காலம் கடந்தே புரிந்து கொண்டார் என்று தமிழகம் வந்தடைந்த ஆய்வாளர் திருநாவுக்கரசு தமிழகப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்துள்ளபேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அப் பேட்டியின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி இராணுவத்திடம் வீழ்ந்த பிறகும் பிரபாகரன் போரை முன்னெடுத்துச் செல்வதில் தீவிரமாக இருந்தார்.பிரபாகரனை குறிவைத்துத் தாக்குதல் நடப்பது தெரிந்து 600 புலிகள் அவரை ஆனந்தபுரம் பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அப்போது நான்கு புறமும் இராணுவம் சூழ்ந்து கொண்டு தாக்குதல் நடத்தியது.

பிரபாகரனுடன் அசாத்திய திறமை படைத்த கடாபி, தீபன், விதுஷா, துர்க்கா உள்ளிட்ட போராளிகளும் அடுத்த நிலைத் தளபதிகளும் பாதுகாத்து நின்றனர்.அந்த இலக்கை இராணுவம் குறிவைத்துத் தாக்கியதில் புலிகளுக்கு நினைத்துப் பார்க்க முடியாத பேரிழப்பு ஏற்பட்டது.

பிரபாகரனின் அதி முக்கிய தளபதிகள் அதில்கொல்லப்பட்டனர். ஆனாலும் பானு உள்ளிட்ட முக்கிய தளபதிகளால் அந்தத் தாக்குதலில் இருந்து நூலிழையில் காப்பாற்றப்பட்டார் பிரபாகரன்.

பிரபாகரன் அமெரிக்க அரசை உறுதியாகநம்பினார்.ஹிலாரிகிளின்டனிடம் நம்ம ஆட்கள் பேசி விட்டனர் அதனால் சீக்கிரமே அமெரிக்கா நம் விவகாரத்தில் தலையிடும். அதுவரை தாக்குப் பிடிப்போம் என்று சொன்னார்.ஆனால் இந்தியாவைக் கடந்து அமெரிக்காவால் உதவ முடியாது என்பதை காலம் கடந்த பிறகே புரிந்து கொண்டார்.

சரணடைவதில் கடைசிவரை பிரபாகரனுக்குவிருப்பமில்லை.சரணடைவதைவிட சாவதே மேல் என்பது தான் அவரது உறுதியான எண்ணம். ஆனால் கடைசி நேரத்திலும் வல்லமை மிக்க போராளிப்படை பிரபாகரனைச் சுற்றி நின்றது. அவர் கடைசிக் கணத்தில் என்ன முடிபெடுத்தார் என்பது அவரைச் சுற்றி நின்றவர்களுக்குக் கூட தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மற்றப்படி பிரபாகரன் நிலை என்ன ஆனது என்ற கேள்விக்கு யூகமான பதிலைச் சொல்வது சரியானதாக இருக்காது.

பிரபாகரனை இதற்கு முன்புநான் பார்த்திருக்கின்றேன்.இராணுவம் காட்டிய அவரது சடலத்தில் முக அமைப்புகள் எல்லாம் அவரைப் போலவேதான்இருந்தது. ஆனாலும் அதில் வேறேதும் ஜோடிப்பு செய்யப்பட்டிருக்கலாம் என்று மக்கள் மத்தியில் பேச்சிருந்தது. அடுத்தடுத்த தினங்களில் பிரபாகரன் கொல்லப்பட்ட தகவலை முக்கால்வாசிமக்கள்நம்பத்தொடங்கி விட்டார்கள்.

பிரபாகரனைப் பிடிக்காதவர்கள் கூட அவர் மரணித்ததாக வந்த செய்தியை நினைத்துக் கலங்கினார்கள். காரணம் தமிழீழப் போராட்டத்திற்கு அவரை விட்டால் வேறு ஆள் இல்லை என்பதே தமிழ் மக்கள் மனதில் ஆணியாக அறையப்பட்டிருக்கும் உண்மை.

பிரபாகரன் தனது குடும்பத்தினர் அனைவரையுமே ஈழமண்ணில் தான் வைத்திருந்தார். நெருக்கடியான நிலைக்கு முன்பே அவர்களை பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவைத்திருக்க முடியும். ஆனால் அதில் அவருக்கு துளியும் விருப்பமில்லை. இரண்டு மகன்களையும், மகளையும் மக்கள் பார்க்கும்படியான நிலையில்தான் அவர் வைத்திருந்தார். தன்னுடைய குடும்பத்தாரை மட்டும் வெளியே அனுப்பினால்,அது புலிகள் இயக்கத்தின் பிடிப்பை உடைத்து விடும் என்று அவர் உறுதியாக தெரிந்து வைத்திருந்தார்.

அவரது மனைவி மதிவனியை வெளியே அனுப்ப சிலர் முயற்சி எடுத்தார்கள். ஆனால் மதிவதனி வெளியேறக் கூடாது என்று உறுதியாக அறிவித்துவிட்டார். மக்கள் வேறு; குடும்பத்தினர் வேறு என்று அவர் ஒருநாளும்பிரித்துப் பார்த்ததில்லை.

உண்மையைச் சொன்னால் போரின் முடிபு தன் குடும்பத்தினர் கூண்டோடு அழிவதாக்க் கூட இருக்கும் என்பதையும் அவர் அவதானித்து இருந்தார். அதற்காகவே பிரத்தியேகமாக ஒரு மருத்துவரை சந்தித்து தன்னுடைய மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் சிறப்பு சயனைட் தயாரிக்கச் சொல்லி வாங்கி வைத்திருந்தார்.

அதனைக்கொடுத்தனுப்பிய மருத்துவரே என்னிடம் சொன்ன விபரம் இது.சாவைப் பற்றிய அச்சமோ தயக்கமோ பிரபாகரனுக்கு ஒரு போதும் இருந்ததில்லை என்பதற்கு இந்த ஒரு சம்பவமே போதுமானது.

பிரபாகரன் மகன் பாலசந்திரன் போரின் கடைசிவரை ஈழத்தில் இருந்தது உண்மை. மற்றப்படி அவர் எப்போது பிடிபட்டார் என்பதெல்லாம் யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

போரின் இறுதி நேரம் நான் தங்கியிருந்த பங்கருக்கு அருகே ஒரு பெரிய பங்கர் இருந்தது. அதில் பிரபாகரனின் பெற்றோர் தங்கியிருந்தனர். அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்த பிறகு கதிர்காமர் முகாமில் வைக்கப்பட்டிருந்ததை நான் பார்த்தேன். அவர்களை இராணுவம் சித்திரவதை ஏதும் செய்யவில்லை.அதன் பிறகு பாதுகாப்புக் கருதி, வேறொரு சிறப்பு அறையில் வைத்து, இராணுவத்தரப்பு மரியாதையுடன் நடத்துவதாக எனக்குத் தகவல் வந்தது.

பிரபாகரனின் மூத்த மகன் சாள்ஸ் அன்ரனி போரில் மடிந்ததை நேரில் பார்த்தவர்களே உறுதி செய்திருக்கிறார்கள். அதே நேரம் துவாரகா, பாலசந்திரன், மதிவதனி ஆகியோர் என்ன ஆனார்கள் என்பது முகாமில் இருந்த எனக்கு சரிவரத் தெரியவில்லை.

பொட்டம்மான், சூசை உள்ளிட்ட போராளித் தலைவர்கள் பற்றி எந்தத் தகவலும் இல்லை. ஒரு விஷயத்தை மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். பிரபாகரன் கொல்லப்பட்டது உண்மையெனில்,அது பொட்டம்மானைக் கொன்ற பிறகுதான் நடந்திருக்க முடியும். (ந)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா மாரிமுத்து
(செல்லராச்சி)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் 5ஆம் வட்டாரம், புங்குடுதீவை வாழ்விடமாகவும், இல.60 பொற்பதி வீதி கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா மாரிமுத்து (செல்லராச்சி) நேற்று (19.07.2009) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான நாகப்பன் சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்ற சுப்பையாவின் (செல்லர்) அன்பு மனைவியும், காமாட்சி மற்றும் காலஞ்சென்றவர்களான பராசக்தி,கனகாம்பிகை ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசையா மற்றும் கந்தசாமி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கதிர்காமன்,சின்னம்மா சண்முகம், சின்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், கோபாலகிருஷ்ணன்–வரலட்சுமி (மஞ்சு), பிள்ளைநாயகம்– தவமணிதேவி, நாகேஸ்வரி (சின்னமணி), தயாளன்–ராதா, ஜெயதிலகா (மல்லி)–கீதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2009) திங்கட் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

க.பிள்ளைநாயகம் (மருமகன்)
பி.ரமேஸ் (பூட்டன்)
ரமேஸ் போட்டோ
(புங்குடுதீவு-5)

இல.60, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.
0776163349

(2986)


### திருமதி தம்பிராசா நவமணி

கற்கோவளத்தை பிறப்பிடமாகவும் இன்பர்சிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா நவமணி 19.07.2009 அன்று காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பிராசாவின் அன்பு மனைவியும் சந்திரதாஸ், தேவதாஸ், சிவதாஸ், சித்திரா, சுபத்திரா, அன்னலட்சுமி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் க.சூரியகுமாரன், வே.ஆனந்தவேல், வே.கனகசபானந்தன்,இ.தயானந்தன், சி.மாலினி, தே.ஜெயமனோகரி, ச.ரஞ்சிததேவி ஆகியோரின் அன்புமாமியும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (20.07.2009) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக[illegible]க்காக பிற்பகல் 4.00 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.தயானந்தன்
[மருமகன்]

(C-2875)

## கண்ணீர் அஞ்சலி



19.07.2009 அன்று சிவபதம் அடைந்த எமது அன்னை

சுப்பையா மாரிமுத்து
(செல்லராச்சி)

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப்பிரார்த்திக்கின்றோம்.

புங்குடுதீவு–07

ச.கடாட்சம்
குடும்பத்தினர்.

## வன்னியில் உயிரிழந்தவர்களுக்கு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நாளை ஆத்ம ஈடேற்ற பூசை

### இந்து அமைப்புகளின் ஒன்றியம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வன்னியில் உயிர் நீத்தவர்களின் ஆத்ம சாந்திக்கான பொது மோட்ச ஆராதனை சரித்திரப் பிரதித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நாளை ஆலய ஆதினகர்த்தா இராஜஇராஜ ஸ்ரீ க.நகுலேஸ்வரக் குருக்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வை மாவைக் கந்தன் ஆலய ஆதினகர்த்தா மகாராஜ ஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்களும் இணைந்து நடத்தி வைப்பார்.

இந்து அமைப்புக்களின் ஒன்றிய பிரதி நிதிகளும் பொதுமக்களும் இந்தஆராதனையில்கலந்துகொள்ள வுள்ளனர்.

அனைத்து மக்களும் இந்நாளை வன்னியில் மரணித்த எமது உறவுகளின் ஆத்மஈடேற்றத்திற்காப் பிரார்த்திக்குமாறு இந்து அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ந)

## புலிகளுக்கு நிதி வழங்கியவர்களின் விபரம் அடங்கிய கோவைகள் மீட்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் திட்டங்கள், ஆயுதக்கொள்வனவு விபரங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் அடங்கிய கோப்புக்கள் சில மீட்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவுமாவட்டம்வெள்ளாமுள்ளிக்குளம் பகுதியில் நிலத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்தே இந்தக் கோப்புக்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டிருந்த 272 கோப்புக்கள் மீட்கப்பட்டிருப்பதாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அத்தியட்சகர் வாஸ் குணவர்த்தன கூறினார்.

விடுதலைப் புலிகள் அமைப்புடன்கடந்தபத்துவருடங்களாக இணைந்து செயற்பட்டு வந்த ஒருவர் வழங்கிய தகவலின் அடிப் படையிலேயே இவை மீட்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு நிதி உதவி வழங்கியவர்கள்,வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள், ஆயுதக் கொள்வனவு பற்றி விபரங்கள், ஆயுதக் கடத்தலில் ஈடுபடும் கப்பல்கள் பற்றிய விபரங்கள் போன்றன இந்தக் கோப்புக்களில்உள்ளடங்கியிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு கூறியு ள்ளது. (ந-5)


ஆனந்தி திருமண சேவை

மணப்பெண் தேவை

1977இல் பிறந்த, பூரநட்சத்திரம் கிரகபாவம் 20, செவ்வாய் தோஷமற்றவர். கவர்ச்சியுடைய 5 அடி 4 அங்குல உயரம், தனியார் நிறுவனத்தில் தொழில் புரிபவருக்கு வெளியூர் அல்லது உள்ளூர் மணமகளை நாடுகின்றோம். கடிதம், நேரடி, தொலைபேசி (0212228708) மூலம் தொடர்பு கொள்ளுங்கள் V.A.சிவராசா சோதிடர், ஆனந்தி திருமண சேவை, 56 அம்மன் வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(2985)

# இன்று ஒரு தகவல்

## உயர்வோம்

நண்பன் ஒருவர் தவறு செய்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே நீ செய்வது தவறு என்று சுட்டிக்காட்டுவது ஒரு வகை. அதற்குப் பதிலாக எது சரி என்று அவர் புரிந்து கொள்ள உதவி செய்வது இன்னொரு வகை.

இந்த இரண்டாவது வகைதான் நிர்வாக இயலில் மிகவும் முக்கியம். அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருவர் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா? சக ஊழியர்களிடம் எப்படிப்பழக வேண்டும்? மேலதிகாரிகளிடம் எப்படிப் பழக வேண்டும்?தனக்குக் கீழே வேலை செய்பவர்களிடம் எப்படிப் பழக வேண்டும்? வாடிக்கையாளர்களிடம் எப்படிப் பழக வேண்டும்?

இவர்கள் எல்லோரிடமும் செம்மையான உறவை ஏற்படுத்திக் கொள்வது எப்படி? இதையெல்லாம் சொல்லிக்கொடுக்கும் பாடந்தான் திறமையான உறவு. Inter Presonal Skills என்பது எந்த வேலையில் இருந்தாலும் சரி இந்த உறவுகளை வளர்க்கும் திறன் உள்ளவர்கள் விரைவில் முன்னுக்கு வந்துவிடுகிறார்கள். மற்றவர்களிடம் உறவைப் பலப்படுத்திக் கொள்வது எப்படி என்று தெரிந்து கொண்டோமானால் எந்த ஒரு தடையையும் சுலபமாகத் தாண்டி செய்யும் தொழிலில் முன்னுக்கு வந்துவிடலாம்.

ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் ஒரு கணக்கெடுப்பு செய்து பார்த்தார்களாம். பார்க்கும் வேலையில் எப்படியான குணாதிசயம் உள்ளவர்கள் முன்னுக்கு வருகிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக இந்த கணக்கெடுப்பை நடத்தினார்களாம். வெவ்வேறு துறைகளில் வேகமாக முன்னுக்கு வந்திருக்கும் பலரை சந்தித்து இந்த ஆய்வை நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் கண்டுபிடித்த உண்மை என்ன தெரியுமா? ஒருவருக்குத் தன்னுடைய வேலை பற்றிய அறிவு 35 சதவீதம் இருந்தால் போதும். ஆனால் உறவுகளை வளர்க்கும் திறன் 65 சதவீதம் இருக்க வேண்டும். இப்படி இருப்பவர்கள் விரைவில் முன்னுக்கு வந்துவிடுகிறார்கள்.

அதனால் ஒருவருக்கு வேலை சரியாக தெரியவில்லை என்றால் கூட விபரமாக மற்றவர்களிடம் பழகுவது எப்படி என்று புரிந்தால் போதும். அவர் முன்னுக்குவந்துவிடலாம்.

அலுவலகங்களில் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் இது மிகமுக்கியம். வீட்டுக்குள்ளும், வீட்டுக்கு வெளியிலும் கூட இது முக்கியம். மற்றவர்களிடம் பழகுவது எப்படி என்பதை தெரிந்து கொள்ளாதவன் வாழ்க்கையில் முன்னேற முடியாது. இன்றைக்கு ஆயுதங்களால் காயப்படுத்திக் கொள்பவர்களைவிட வார்த்தைகளால் காயப்படுத்திக் கொள்பவர்கள் தான் அதிகம். பெரியவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? "நீங்கள் இந்தப் பூமியில் பிறந்ததன் அர்த்தம் பூர்த்தியாக வேண்டுமானால் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். உதவி செய்யமுடியாவிட்டாலும் கூட யாரையும் புண்படுத்தாதீர்கள்" என்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒருவர் அலுவலகத்தில் வேலை பார்க்கிறார். அவர் சொல்லுவார்... "எனக்கு இந்த உறவுகளை வளர்க்கும் திறன் அதிகம் சேர். சக ஊழியர்களிடம் சுமூகமாக நடந்து கொள்வேன்" என்றார்.

நான் அவரிடம் "சமீபத்தில் அப்படி ஏதாவது செய்திருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"செய்திருக்கிறேன் சேர். போன வாரம் புதன் கிழமை அலுவலகத்தில் என் பக்கத்தில் இருந்தவருக்கு வயிற்றுவலி... உடனே நான் மெடிக்கல் லீவு போட்டு விட்டு வீட்டுக்கு போய்விட்டேன் சேர்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தென்மராட்சி கல்வி வலய தமிழ்த்தினப் போட்டி முடிபுகள்

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டி முடிபுகள் அறி விக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதலாம் இடத் தைப் பெற்ற மாணவர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவர் எனவும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியவர் களுக்கான பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங் களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**எழுத்தாக்கம்**

பிரிவு 1

கு.கஜனி (மட்டுவில் தெற்கு அ. மி. த.பாடசாலை), ப.கஸ்தூரி (சாவ இந்து ஆரம்ப பாடசாலை), கு.பூர்ணிமா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி

**கட்டுரை வரைதல்**

பிரிவு 2

கு.ரதீபா (மட்டுவில் கமலாசினி வித்தி), செ.சோபிதா (எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை), ஸ்ரீ.தனுசா (உசன் இராமநாதன் மகா வித்தி

பிரிவு 3

ஞா.கார்த்திகா (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி), சி.தனஞ்சிகா (எழுது மட்டுவாழ் அ.த.க. பாட சாலை), இ.சங்கமி (உசன் இராமநாதன் மகா வித்தி

**கட்டுரை வரைதல்**

**இலக்கியம் நயத்தல்**

பிரிவு 4

இ.இராசப்பிரவிந்தன் (சாவ இந் துக் கல்லூரி), க.கஜனா (சாவ மகளிர் கல்லூரி), த.ஷாத்வீகா (கொடிகாமம் அ.த.க. பாடசாலை)

பிரிவு 5

இ.யசோதா (வரணி மகா வித்தி), சி.தாரதா (எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை), செ.ஜன்ஷா (உசன் இரா மநாதன் மகா வித்தி)

**இலக்கணப் போட்டி**

பிரிவு 4

த.தனுசா (மிருசுவில் அ.த.க. பாடசாலை), ப.சாகித்தியன் (சாவ இந்துக் கல்லூரி), செ.நிசாந்தினி (கச்சாய் அ. த.க. பாடசாலை)

பிரிவு 5

நி.கீர்த்தனா (சாவ இந்துக் கல் லூரி), அ.பிரதீபா (உசன் இராமநாதன் மகா வித்தி), சி.கஸ்தூரி (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி

**திறனாய்வுப் போட்டி**

பிரிவு 5

ஸ்ரீ.யசோதா (வரணி மகா வித்தி), க.உஷானி (உசன் இராமநாதன் மகா வித்தி), அ.கௌதமி ( கொடிகாமம் அ. த.க. பாடசாலை)

**குறுநாடக ஆக்கம்**

பிரிவு 4

க.கோபிகா (வரணி மகா வித்தி), து.வின்சன்(கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை), ஜெ.விஜிதா (விடத்தற் பளை கமலாசினி வித்தி

பிரிவு 5

அ.தர்மாலினி (சாவ மகளிர் கல் லூரி), சி.ஜெயதர்சினி (வரணி மகா வித்தி), பெ.யூஜின் தனுசியா (எழுது மட்டுவாழ் அ.த.க பாடசாலை)

**கவிதை ஆக்கம்**

பிரிவு 4

பு.நிவேகா (மந்துவில் றோ.க. பாடசாலை), சு.சுகன்யா (சாவ மகளிர் கல் லூரி), இ.உஷாந்தினி (கைதடி முத்துக் குமாரசாமி வித்தி

பிரிவு 5

சி.றம்யா (உசன் இராமநாதன் மகா வித்தி, கு.தர்மேந்திரன் (கொடி திரு நாவுக்கரசு மகா வித்தி, அ.பகீரதன் (சாவ டிறிபேக் கல்லூரி)

**சிறுகதை ஆக்கம்**

பிரிவு 4

சி.லக்சியா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி, ம.றஜீகா (மட்டுவில் சந்திர மௌலீசா வித்தி, சி.தர்சிகா (மிருசுவில் அ.த.க. பாடசாலை)

பிரிவு 5

ஜெ.கீர்த்தனா (கொடிகாமம் அ.த. க. பாடசாலை),பி.பிரதீபா (எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை), தௌ. கார்த்திகா (சாவ டிறிபேக் கல்லூரி),பா.சரிதா (சாவ இந்துக் கல்லூரி)

**வாசிப்பு**

பிரிவு 1

சி.நிஷாயினி (மட்டுவில் சந்திர மௌலீசா வித்தி, செ.வித்தகி (கொடிகாமம் திருநாவுக்கரசு அ.மி. வித்தி, க.சாளினி (கைதடி விக்கினேஸ்வரா வித்தி

பிரிவு 2

சி.அனோசிகன் (மீசாலை வீரசிங்கம்மகா வித்தி, சி.மாதுமை (மட்டுவில் சந் திரமௌலீச வித்தி), ஜெ.கல்யாணி (கைதடி குருசாமி வித்தி

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

**கதை கூறல்**

பிரிவு 1

இ.மதுரங்கா (சாவ இந்து ஆரம்ப பாடசாலை), அ.வேஜின் மேரி (சாவ கச் சேரி றோ.க.த.பாடசாலை), சு.ஹாயத்திரி ஹரிற்றா (நுணாவில் கிழக்கு அமிர் தாம்பிகை வித்தி

**பேச்சு**

பிரிவு 1

பா.அன்ரன் டர்சன் (எழுதுமட்டு வாழ் அ.த.க. பாடசாலை), த.தர்ச னாங்கி (கச்சாய் அ.த.க. பாடசாலை), அ.கீர்த்தனா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி

பிரிவு 2

செ.சாரங்கன் (சாவகச்சேரி இந் துக் கல்லூரி), வி.கார்த்திகாயினி (கொடி காமம் திருநாவுக்கரசு மகா வித்தி), வி.ம தனிக்கா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி

பிரிவு 3

இசுஞ்சீவ் (கொடிகாமம்திருநாவுக்கரசுமகா வித்தி), ச.மதுஷா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வீ.விஜிதா (மந்து வில் ஸ்ரீ பாரதி வித்தி, கு.வருதி (மட்டுவில் கமலாசினி வித்தி )

பிரிவு 4

க.சுகிர்னா(கைதடி விக்னேஸ்வரா வித்தி), நா.சுஜீபன் (கச்சாய் அ.த.க பாடசாலை),சி.கார்த்திகா(சாவ மகளிர் கல்லூரி)

பிரிவு 5

வே.திலக்ஷா (எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை), த.தர்கீஸ் (வரணி மகா வித்தி), சி.சிவவதனி(சாவ மகளிர் கல்லூரி)

(தொடரும்)



மத்திய கிழக்கில் பேரீந்து மரம் காய்ப்பது போல வடமராட்சி கிழக்கு, குடத்தனை 6 ஆம் கட்டை, மருதங்கேணி, பருத்தித்துறை வீதியில் வரணிக்கு செல்லும் பாதையில் நாகநாதன் என்பவரது தோட்டத்தில் பேரீந்து மரம் ஒன்று காய்த்து குலை குலையாக பேரீச்சம் பழங்கள் இருப்பதை காணலாம். இதை பொதுமக்கள் நாளாந்தம் பார்வையிட்டு வருகின்றனர். (படம்: மருதங்கேணி நிருபர்)

# இராசி பலன்

*20.07.2009*

*(ஆடி 4 ,திங்கட்கிழமை)*

*திரயோதசி பிற்பகல் 2.05 மணிவரை*

*மிருகசீரிடம் முற்பகல் 9.18 மணிவரை*

*இராகுகாலம் 7.31-9.01 மணிவரை*

*சுபநேரம் 12.01-1.31மணிவரை*


*அமிர்த சித்தம்*


| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனலாபம், சகோதரர் உதவி , சுவாரஸ்யம். |
| இடபம் | தொழில் சிந்தை, முயற்சி தாமதம், கௌரவக் குறைவு, மனோ சங்கடம். |
| மிதுனம் | மாதர் நட்பு, சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, போசன சுகம். |
| கடகம் | சோம்பல் நிலை, குடும்பக் கவலை, பிறருக்கு உதவுதல், திடீர் பயணம். |
| சிங்கம் | எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் வருகை, போசன சுகம், தேகநலன். |
| கன்னி | அதிகாரம், தன்னம்பிக்கை, ஆரோக்கிய நிலை, நல்ல செய்தி. |
| துலாம் | புதிய திருப்பம், திடீர் பயணம், எதிர்பாராத செலவு, ஆரோக்கியக் குறைவு. |
| விருச்சிகம் | எதிர்பாராத பகை, பணக் குறைவு, முயற்சி தாமதம், வாகன பயம். |
| தனுசு | களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், தனவருவாய், நல்ல வரவேற்பு. |
| மகரம் | சுவாரஸ்யம், காரிய சித்தி, தேகநலன், பிரயாண நன்மை. |
| கும்பம் | புத்திரரால் கவலை, வேலைச் சுமை, காரிய தாமதம், ரோக நிலை. |
| மீனம் | மாதா சுகம், நல்ல முயற்சி, சுபசெலவு, வீண் பயம். |

**வளவன்**

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 140 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 |
| கோவா | 140 | 140 | 120 |
| கரட் | 100 | 100 | 100 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 30 | 40 | 20 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 60-80 | 100 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 20-30 | 20-40 | 30 |
| கரணைக் கிழங்கு | 70 | 90 | - |
| பயிற்றங்காய் | 70 | 80 | 50 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 40 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 300 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 10 |
| தேசிக்காய் | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-25 | 30-35 | 30 |
| போஞ்சி | 350 | -- | -- |



புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் ஆசியுரை வழங்குவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், கல்லூரி அதிபர் அருட்திரு ம.ஜெறோ செல்வநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும், வெற்றியீட்டிய அணிக்கான கேடயத்தை யாழ்.போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.இராஜேந்திரா வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் க. ஸ்ரீமோகனன் தலைமையில் உதவி அரசாங்க அதிபர் மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6-134)

## கவிஞர் இ.முருகையனின் நினைவஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாகித்ய ரத்னா கவிஞர் கலாநிதி இ.முருகையனின் நினைவு நிகழவு 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை வலி. கிழக்குப் பிரதேச சபை செயலாளர் த.நடராசா, நினைவுரைகளை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், இந்துசாதனம் ஆசிரியர் சி.சிவசரவணபவன், ஆங்கில ஆசிரியர் த.ந.பஞ்சாட்சரம், சங்கானைக் கோட்டக் கல்வி அலுவலர் துரை எங்கரசு ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் "கவிதைக்குள் உயிரொன்றி வாழ்" என்னும் கவியரங்கமும் இடம்பெறவுள்ளது.

கல்வயல் வே.குமாரசாமி தலைமையில் நடைபெறும். இக் கவியரங்கில் கவிஞர் சோ. பத்மநாதன், கவிஞர் த.ஜெயசீலன், கவிஞர் ம.பா.மகாலிங்கசிவம், கவிஞர் கலாநிதி வேல்நம்பி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## ஆடிப்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நவாலியூர் அருள்மிகு களையோடை கண்கை அம்மன் ஆலய ஆடிப்புரத் திருவிழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெற்று வருகிறது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை விசேட அபிஷேக[illegible]கள் இடம்பெற்று அம்பிகை மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட அழகிய முத்துச் சப்பரத்தில் திருவீதி உலாவரும் காட்சி இடம்பெறும். (6-4-23)

# உலக உணவுத் திட்ட இலகு வேலைக்கான உணவு வேலைத்திட்டம் நிறுத்தம்

## அரசஅதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட இலகு வேலைக்கான உணவு வேலைத்திட்டம் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளதால் இவ் வேலைத் திட்டம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இம் மாதம் இலகு வேலைக்கான உணவு வேலைத் திட்டத்தின் கீழ் வேலையில் ஈடுபட்டவர்களுக்கான உணவு விநியோகம் ஓகஸ்ட் மாதம் வழங்கப்படும் எனவும் மேலும் இத் திட்டத்தின் கீழ் உள் வாங்கப்பட வேண்டிய பயனாளிகளின் விபரங்கள் பிரதேச செயலர்களிடம் கோரப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் விபரங்கள் கிடைக்கப்பட்டவுடன் புதிய நடைமுறையில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

மேலும் உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் தொழில் ரீதியாகப் பாதிக்கப் பட்டோருக்கான நிவாரண விநியோகம் வழமை போல இம் மாதமும் வழங்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (6)




# யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாபெரும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனம், இலங்கை காப்புறுதிச்சபை மற்றும் பங்குகள், பிணைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தும் *வடக்கு மாகாணத்தில் தனியார் துறையின் வளர்ச்சியும் முதலீட்டுச் சந்தையில் முதலிடுவதால் ஏற்படும் நன்மைகளும்* எனும் தலைப்பிலான கருத்தரங்கு இலங்கைக் காப்புறுதிச் சபை மற்றும் பங்குகள்,பிணைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர் உதயசிறிகாரிய வசத்தால் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியிலிருந்து 3.45 மணி வரை யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தலைமையுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவபீட விரிவுரையாளர் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், வரவேற்புரையை யாழ்ப்பாண முகாமையாளர் சங்க இணைப்பாளர் வி.நிரஞ்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் தனியாரும் பொதுப் பங்காளர்களும் எனும் விடயத்தில் பங்குகள், பிணைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சனா டி சில்வா, பங்குச் சந்தையில் முதலிடுவதால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாக C.T.ஸ்மித், தனியார் நிறுவனப் பணிப்பாளர் கோடன் நடேசன், முதலீட்டுச் சந்தை பற்றிய கற்கையின் பயன்கள் தொடர்பாக நிதிச் சேவைகள் கல்வி நிறுவனப் பணிப்பாளர் டி.வி.பி.எச்.திஸ்ஸ பண்டார, புதிய கம்பனி நடவடிக்கைகள் 2007 பற்றி பிணைகள், பங்குகள் ஆணைக்குழுவின் சட்டத்துறை பணிப்பாளர் மலிக் காடர் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இக் கருத்தரங்கின் நிறைவில் இவ்விடயம் குறித்து கலந்துரையாடல் இருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனம் கேட்டுக் கொள் கின்றது. (6)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயத்தின் கோட்டப் பிரிவுகளின் விளையாட்டு விழா இம்மாதம் 4ஆம் வாரத்திலும் வலயமட்ட விளையாட்டு விழா ஆகஸ்ட் மாதம் 3 ஆம் வாரத்திலும் இடம்பெற இருப்பதால் விளையாட்டுக்களில் பங்குபற்றும் பிள்ளைகளின் பெயர், வயது, பால், பங்குபற்றும் விளையாட்டு ஒரு பிள்ளை ஆகக் கூடியது மூன்று விளையாட்டு போன்ற விபரங்களை எதிர்வரும் 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வலய அலுவலகத்தில் இணைப்பாளர், ஆசிரியர் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியவர் களில் ஒருவரிடம் சமர்ப் பிக்க வேண்டும் என யாழ் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-4)

## ஆங்கில தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்தின் ஆங்கில தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் ஆங்கில ஆசிரியர் செல்வி ஜி. இராசசூரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.கணேசலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபரும் திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளருமான எ.முத்துக் குமாரசுவாமி, பன்னாலை கிராம அலுவலர் திருமதி ம.மதிவதனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)


# உடனடி வேலை வாய்ப்பு

இலங்கை காப்புறுதி வரலாற்றில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்று தனது வலையமைப்பினை தென்மராட்சி பிரதேசத்திற்கு விஸ்தரிக்கும் நோக்கில் இப் பிரதேசத்தில் வசிக்கும்

- விடா முயற்சியும் திறமையும் உடையவர்கள்
- வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க துடிப்பவர்கள்
- கனவை நனவாக்குபவர்கள்

என்பவற்றை இலட்சியமாக கொண்டவர்களில்

- காப்புறுதி ஆலோசகர்கள்
- காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு

- க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும்
- க.பொ.த உயர்தரத்தில் சித்தி (பதவி II)
- சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவம் (முக்கியமல்ல)

என்பவற்றை தகைமையாகக் கொண்டவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு சுய விபரக்கோவையினை(தொலைபேசி இலக்கத்துடன்) அனுப்பிவைக்கவும்.

***இவற்றிற்கான நன்மைகள்***

- யாராலும் தடுக்கப்பட முடியாத வரையறை இல்லா ஊதியம்
- இலவச வெளிநாட்டு சுற்றுலாவிற்கான வாய்ப்பு
- மாதாந்த வருடாந்த போட்டிகளில் பங்குபற்றி தங்கம் போன்ற பரிசில்களைப் பெறும் வாய்ப்பு
- முயற்சிக்கு ஏற்ப விரைவான பதவி உயர்வு
- மோட்டார் சைக்கிள்,கார், லோன் போன்ற வசதிகள்

I) விண்ணப்பிக்கும் முகவரி:- மே/பா வலம்புரி,
விளம்பர இல.2970
இல.03,02 ஆம் ஒழுங்கை,பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
II)விண்ணப்ப முடிவு திகதி:-24.07.2009

Note நேர்முகத்தேர்வு பயிற்சி வகுப்புக்கள் என்பன சாவகச்சேரியில் நடைபெறும். (2970)


# யாழ்.மாவட்ட பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு இருநூறுக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத் தின் கீழ் யாழ். மாவட்டத்தில் பற்றாக்குறையாகக் காணப்படும் ஆரம்பப் பிரிவு ஆசியர்களின் விபரங்கள் கல்வித் திணைக்களத்திற்கு மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் 236 ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப் படுகின்ற போதிலும் தீவகக் கல்வி வலயத்தில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (6)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

டி.எஸ்.ஐ.நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ள சம்பந்தப்பட்ட சுற்றுப்போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பதிவு செய்யப் பட்ட அணிகள் யாவும் குறித்த நேரத்திற்கு முன்னர் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளதுடன் இப் போட்டிக்கு பொறுப்பான ஆசிரியர்களை இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறு போட்டி இணைப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (4)

# அகதி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் மீள்குடியேற்றம்

யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் அவசியம் குறித்தும், போர்முனைப் பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களை மீள்குடியேற்றம் செய்வது குறித்தும் பலராலும் பேசப்பட்டு வருகின்றது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதில் 13 ஆவது திருத்தச் சட்டம் பெரிதும் கை கொடுக்கும் என்ற வகையில் பல தரப்பினராலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்ற இத்தருணத்தில் அரசில் அங்கம் வகிக்கும் சில இனவாதக் கட்சிகள் அதிகாரப் பரவலாக்கல் குறித்து வன்மையாகக் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றமையும் தெரிந்ததே.

ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் அரசு இந்தியா வழங்கும் 500 கோடி ரூபாவுக்கு அடிமையாகி 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்ப்படுத்த முயன்று வருவதாக பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார். அத்தோடு இந்தியாவைப் பொறுத்த வரையில் தமிழ் தமிழ் மக்கள் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிக்கின்றது. இந்த முதலைக் கண்ணீர் தமிழ் மக்கள் மீது கொண்ட பற்றினால் அல்ல என்பதையும், எமது நாட்டின் வளங்களைச் சூறையாடுவதற்கே என்பதையும் புரிந்துகொள்ள வேண்டுமென்றும் விஜித ஹேரத் எம்.பி. மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசு அதிகாரப் பரவலாக்கலுக்கு அக்கறை செலுத்தினால் வரலாறு காணாத போராட்டத்தை சந்திக் நேரிடும் என்று தேசிய பிக்கு முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். சிஹல உறுமய உள்ளிட்ட கட்சிகளும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக கண்டனங்களையே வெளிப்படுத்துகின்றன.

எனினும், தேசிய பிரச்சினையாக நோக்கப்படுகின்ற தமிழர் பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கலின் ஊடாகவே இறுதித் தீர்வை எட்ட முடியும் என்பது ஜனாதிபதியின் தீர்க்கமான நிலைப்பாடாக உள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு இனவாதிகளின் கூச்சல்களையோ அல்லது அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படுவதையோ பொருட்படுத்தத் தேவையில்லை என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

அரசு கடந்த காலத்தில் பயங்கரவாதிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது போலவே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நடவடிக்கைகளிலும் ஈடுபாடு காட்டி வந்தது. இதற்கெனவே பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் தலைமையில் சர்வகட்சி குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இச் சர்வகட்சிக்குழுவில் பதினொரு அரச சார்பு கட்சிகளும், இரண்டு எதிர்க்கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. சர்வகட்சிக் குழுவானது இதுவரை 119 தடவைகள் கூடி இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராய்ந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வினை வழங்குவதால் மட்டுமே மீண்டுமொரு பிரிவினை வாதம் தலைதூக்காதிருக்கச் செய்ய முடியும் என்பதனை அரசு தெளிவாகவே விளங்கிக் கொண்டுள்ளது. எனவேதான் நாட்டு மக்கள் அனைவரதும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

**இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு மற்றும் மீள்குடியேற்றம் என்பனவே தற்போது அரசு எதிர்கொள்ளும் இருபெரும் சவால்களாகவுள்ளன.**

இந்நிலையில் பெரும்பான்மை இன மக்கள் சில விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்வதன் ஊடாக சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்த ஒத்துழைக்க வேண்டுமென பேராசிரியர் ஜெய்ம்பதி விக்ரமரட்ண போன்ற புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். பெல்ஜியம், ஸ்பெயின், வட அயர்லாந்து, வேல்ஸ் மற்றும் ஸ்கொட் லாந்து போன்ற நாடுகளில் பெரும் பான்மையினர் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொண்டுள்ளதை இதற்கு உதாரணமாகவும் தெரிவித்துள்ளனர்.

அரசு தனது ஒருமைத் தன்மையை பாதுகாத்துக்கொண்டு மாகாணங்களுக்கு இயலுமான உச்சக்கட்ட அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும். இந்தோனேஷியா, இங்கிலாந்து போன்ற நாடுகள் தமது ஒருமைத் தன்மைக்கு பங்கம் விளையாமல் தமது நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வினை ஏற்படுத்திக் கொண்டமை ஒரு முன்மாதிரியாகும்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகவோ அல்லது அதற்கும் மேலான அதிகாரப் பகிர்வின் ஊடாகவோ அரசு தீர்வினை வழங்குவதற்கு இடையிலான காலப் பகுதியில் போரினால்இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றம் செய்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் சிலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களிடையே கல்வி,சுகாதாரம் மற்றும் பொருளாதார மட்ட கணிப்பீடுகளை மேற்கொண்டு அதற்கேற்ற வகையிலான பரிகார முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் புத்திஜீவிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, அரசு மீள்குடியேற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி வருவதனையும் அவதானிக்க முடிகின்றது.வன்னயில் இடம்பெயர்ந்த மக்கைள மீளக் குடியமர்த்துவது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை (14.07.2009) ஜனாதிபதி செயலகத்தில் உயர் மட்ட மாநாடு ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

வடமாகாண மாவட்ட அரசாங்க அதிபர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக இங்கு திட்ட அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், சகல அரச அதிபர் பிரிவுகளிலும் ஒரே மாதிரியான மீள் குடியேற்றத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான அறிக்கைகளை தயாரிக்குமாறு இதன்போது வடக்கு செயலணியின் தலைவர் பசில்ராஜபக்ஷ வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றும் மூன்றாம் கட்டப்பணி விரைவில் வவுனியா மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது.

அத்தோடு வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தினூடாக வடபகுதி வாழ் மக்களின் நலன்கருதி அரசு பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். வட மாகாணத்தில் பல்வேறு தொழிற்துறைகளை ஆரம்பிப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழர்களும் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். யுத்த சூழ்நிலை முடிவுக்கு வந்துள்ள நிலையில் புலம்பெயர் ந்த தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதேவேளை, வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் ஸ்தாபிக்கப்பட உள்ளதாக வெளி வந்த வதந்திகளுக்கு அமைச்சர் டலஸ் அழகப்பெரும முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

வடக்கில் முன்பு குடியிருக்காத எந்தவொரு குடும்பமும் அங்கு மீளக்குடியமர்த்தப்படமாட்டாது. அங்கு ஒரு சிங்களக் குடும்பம் கூட திட்டமிட்ட முறையில் மீள்குடியேற்றப்படவில்லை என்று அழகப்பெரும மறுப்புத் தெரிவிக்கின்றார்.

எவ்வாறாயினும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் மீள்குடியேற்றம் என்பன தற்போது அரசு எதிர்கொள்ளும் இரு பெரும் சவால்களாக உள்ளன. இவை தொடர்பாக பலரும் பல்வேறு விதமான கருத் துக்களைத் தெரிவித்து வருகின்றபோதும் இவ்விரு விடயங்களும் இலகுவில் தீர்வு கண்டு விடக்கூடிய ஒரு விடயமல்ல. அரசியல் தீர் வுக்கு முன்னதாக இனவாதிகளின் கூச்சல்களை அரசு சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

இதேவேளை மீள்குடியேற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னர் போர் முனையில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.இது இலகுவான காரியமல்ல.

**துரைசாமி நடராஜா**

புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் அரசு தற்போது ஈடுபட்டு வருகின்றது. இதற்கென இந்திய இராணுவத்தின் உதவியும் கிடைத்துள்ளது. எவ்வாறெனினும் மூன்று தசாப்த காலமாக புரையோடிப்போயிருந்த போர்ச்சூழலை முடிவுக்கு கொண்டு வந்துள்ள அரசு இனவாதிகளை வெற்றிகொண்டு அரசியல் தீர்வினையும் அகதி வாழக்கைக்கு முற்றுப்புள்ளிவைத்து மீள்குடியேற்றத்தையும் ஏற்படுத்தும் என்று திடமாக நம்பலாம். இவ்விலக்கினை அடைய ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்துவத மூலம் ஒத்துழைப்பு வழங்குவது நாட்டு மக்களின் இன்றைய கடமையாகும்.

# சர்வதேச நாணய நிதியக் கடன் வழங்குவதில் கடுமையான நிபந்தனைகள் கடைப்பிடிக்க வேண்டும்

## கனேடிய லிபரல் கட்சி வலியுறுத்து



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு வழங்கப்படும் எந்தவித கடன் தொடர்பிலும் கடுமை யான நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென கனேடிய லிபரல் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பிலான முறையான பராமரிப்பு, சமாதானத்தை நிலை நாடடுதல், நாட்டின் பாதுகாப்புப் பேன்ற மனிதாபிமான விடயங்களின் அடிப்படையிலேயே இது தீர்மானிக்கப்பட வேண்டுமெனவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு பொருளாதார உதவியை வழங்கும்போது நாம் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான பொப்றே கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மனதாபிமான செயற்பாடுகளில் முழு அளவில் கவனம் செலுத்தாமல், பெருந்தொகையான பொருளாதார உதவியை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.

இலங்கையின் நிலைவரம் பயங்கரமாயுள்ளது.

அதற்கு சர்வதேச அவதானம் தேவைப்படுகிறது.

உதவி தேவைப்படுவோர்களைக் கருத்திற் கொண்டே எமது முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று குறிப் பிட்டார். பொப்றே குறிப்பிட்டுள்ள நிபந்தனை களில் சிலவருமாறு,

சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறியுள்ள இராணுவத்தினரை நீதியின் முன் நிறுத்துதல்.

முழு அளவிலான தடங்களில்லாத ஐக்கிய நாடுகளின் விசாரணைக்கு சம்மதித்தல்.

இடம்பெயர்நத் மக்களை சர்வதேச தரத்தில் பராமரித்தல்.

சுதந்திரமாக நடமாடும் உரிமையை நிலை நிறுத்தலும் மனிதாபிமான அமைப்புக்களையும் ஊடகவியலாளர்களையும் முகாம்களுக்கு அனுமதித்தலும்.

அதிகாரப் பரவலாக்கம் உட்பட நீதியையும் நல்லிணக்கத்தையும் முன்னேற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல்.

இந்த நிபந்தனைகள் குறித்து சர்வதேச சமூக அளவில் இணக்கப்பாடு கொண்டுள்ளது. மேற்கண்ட நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படுவது சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெறுவதற்கு அவசியமாகும் என்பதை வலியுறுத்த கனடா முன்னின்று அழைப்பு விடுக்க வேண்டுமென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதே கருத்தையே பிரிட்டிஷ் வெளிநாட்டுச் செயலாளர் டேவிட் மில்லிபேன்ட்டும் அண்மையில் வலியுறுத்தியிருந்தார்.

சர்வ தேச நாணய நிதியத்தின் பணம் சம்பந்தப்பட்ட எவ்வித பயன்பாடும் முறையான பொறுப்பான நடத்தைக்குரியதாக இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## இசைச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி வடக்கு ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு தினமும் மாலை 7மணிக்கு ''அருளும் அருளாளர்களும்'' எனும் தலைப்பில் கவிமணி அன்னைதாசனின் இசைச்சொற்பொழிவு இடம்பெற்றுவருகிறது. (6-4)

# கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைக்காக 5 ஆயிரம் இந்திய இராணுவத்தினர் கொழும்பு வருகை

**தமிழக நாளிதழ் தகவல்**

இலங்கை வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக 5ஆயிரம் இந்திய இராணுவம் கொழும்பு வந்தடைந்திருப்பதாக தமிழகத்திலிருந்து வெளியாகும் இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கண்ணிவெடிகளை அகற்றவென இந்திய இராணுவத்தினர் 500 பேர் இலங்கை வரவுள்ளனர் என்று பாதுகாப்புப் பணியாட் தொகுதி தலைமை அதிகாரி ஜனரல் சரத் பொன்சேகா அண்மையில் தெரிவித்தார்.

ஆனால் தற்போது 5ஆயிரம் வீரர்கள் வரை வந்திருப்பதாகவும் அவர்கள் விரைவில் கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்குச் சென்று பணியைத் தொடங்குவார்கள் என்று கூறப்படுகின்றது. அந்த இதழில் மேலும் கூறியிருப்பதாவது, சீனா,பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடமிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்வதை இலங்கை அரசு உடனடியாக நிறுத்திவிட்டது. இனி தங்களுக்கு ஆயுதங்கள் தேவையில்லை என்று இலங்கை அரசு அறிவித்துள்ள போதிலும் இந்திய அரசின் கண்டிப்புத்தான் இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக 5ஆயிரம் இந்திய வீரர்கள் இலங்கை சென்றுள்ளனர். 500வீரர்கள் என்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்தாலும் ராஜபக்ஷவின் சகோதரர்கள் டில்லிக்குச் சென்றிருந்த போது நடத்திய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக அவர்களது கோரிக்கையை ஏற்று 5 ஆயிரம் வீரர்களை இந்திய அரசு அனுப்பியுள்ளது.

தமிழர்களை விரைவில் அவரவர் வாழ்விடங்களில் குடியமர்த்த வேண்டுமென்றும் இந்தியா கண்டிப்புடன் கூறியுள்ளதென அந்த இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே இரு தினங்களுக்கு முன்பு கேரள மாநிலத்தில் உள்ள கொச்சின் துறைமுகம் வழியாகவே இந்திய வீரர்கள் இலங்கைக்கு வந்திருப்பதாகவும் அவர்களுடன் ஏராளமான ஆயுதங்கள் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் நவீன கருவிகளும் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் இந்திய அரசு இதனை உறுதிசெய்யவில்லை: (6)

# தசைநார்களின் அமைப்புக்கேற்ப விளையாட்டுப் பயிற்சி அவசியம்

மனிதனுடைய உடலின் பெரும்பாலான பகுதிகள் தசைகளினாலே இணைக்கப்பட்டு காணப்படுகின்றன. உடலின் இயக்கத்திற்கு மிகவும் அவசியமானதும் தசைகளே! இவை. 400 க்கு அதிகமாகக் காணப்படுகின்றன. தசைகள் அனைத்தும் எலும்புகள், Cortilages, Ligaments, Skin அல்லது வேறு தசைகளுடன் இணைக்கப்பட்டு உடலின் இயக்கத்தினை இலகுவான முறையில் பல்வேறு கோணங்களிற்குச் செயற்படுத்துகின்றன.

தசைகளின் சுருக்கத்தினாலும், விரிதலினாலுமே உடலானது தனது அசைவுகளை இலகுவாக மேற்கொள்கின்றது. தசையானது தசைநார்களினால் ஆக்கப்பட்டுள்ளது. இத்தகைய தசைநார்கள் அமைப்பிலும், செயற்பாட்டிலும் ஒன்றுடன் ஒன்று ஓரளவு வேறுபட்டதாகவும் விகிதாசார அடிப்படையில் உடம்பில் வெவ்வேறு தசைக் கூட்டங்களிலும் ஒருவருக்கொருவர் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

- தசைநார்கள்
  - மெதுவாக இயங்கும்தசைநார்கள் Slow twich Muscles Fibers
  - விரைவாக இயங்கும் தசைநார்கள் Fast twich Muscles Fibers
    - Fast Oxiditive
    - Fast Oxiditive Glycolytic

இத்தகைய வேறுபட்ட தன்மைகளானது விளையாட்டுக்களில் ஈடுபடும்போது பாரிய பங்கினை ஒவ்வொரு தனிநபருக்கும் ஏற்படுத்தும். இதனாலேயே சிறு பிராயத்திலேயே அதனை இனங்கண்டு அதற்கேற்ப பிள்ளைகளை சரியான விளையாட்டுத் துறைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களை மிக இலகுவாக இலக்குகளின் உச்சிக்கு நகர்த்திச் செல்லமுடியும்.

இந்த முறைமையை கீழ்த்தேச நாடுகளிலே இன்று வரைக்கும் பயன்படுத்த முடியாதுள்ளது. காரணம் விளையாட்டுத் துறைக்கான தொழில்நுட்ப வளர்ச்சி சீராக முன்னேற்றமடையாமல் இருப்பதுவேயாகும். ஆனால் வளர்ச்சியடைந்த மேலைத்தேச நாடுகளிலே இதுவே பிரதானமாக விளங்குகின்றது.

ஒரு பிள்ளையானது 10 அல்லது 12 வயதிற்கு முன்னர் எத்தகைய தசைநார் தொகுதியை அதிகமாகக் கொண்டுள்ளது என ஆய்வுசெய்து அவர்களை பொருத்தமான விளையாட்டுத் துறைகளிலே ஈடுபடுத்தி அதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதனாலேயே அவ் நாடுகள் அனைத்தும் விளையாட்டுத் துறையில் தமக்கென ஒரு தனித்துவத்தினை பெற்றுள்ளன என்பது வெளிப்படையாகும்.

மனிதனில் காணப்படுகின்ற தசைகளை பிரதானமாக கீழ்வருமாறு வகுக்க முடியும்

A) மென்மையான தசைகள் (Smooth, Non Striated OR Involuntory Muscles)

B) இதயத்தசைகள் ( Cardiac Muscles OR Myocardium)

C) வன்கூட்டுத் தசைகள் (Skeletal, Striated OR Voluntary Muscles)

### மென்மையான தசைகள்

இத்தசைகளில் வரி போன்ற அமைப்புகள் காணப்படுவதில்லை. இது ஒரே ஒரு தசையை மட்டும் கொண்டு அமைந்து காணப்படும். உதாரணமாக வயிற்றுப்பகுதி


### இதயத் தசைகள்

இதயத்தின் செயற்பாடுகளிற்கு அதிகளவில் பயன்படும் இத்தசைகள் இதயத்தினிலேயே சூழ்ந்து காணப்படுகின்றது.

### வன்கூட்டுத் தசைகள்
(Skeletal Muscles)

மனிதனுடைய இயக்கத்திற்கு மிகவும் பிரதானமானது இதுவாகும். இவை அதிகளவு தசைநார்களை கொண்டுள்ளது. இத்தசைகள் காணப்படும் தசைநார்கள் (Bundles) கட்டுகளாகக் காணப்படுவதோடு நீளமானதாகவும் விளங்கும். இந்தத் தசைகளில் காணப்படும் தசைநார்களைக் கொண்டே விளையாட்டுத் துறையை இலகுவாகத் தீர்மானிக்கமுடியும்.

### தசைநாரின் அமைப்பு
STRUCTURE of Muscle Fibre




இவ்வாறு காணப்படும் தசைகள் ஆக்கப்பட்டுள்ள தசைநார்களுள் ஒன்றோடொன்று அமைப்பிலும் செயற்பாட்டிலும் ஓரளவு வேறுபட்டதாகவே அமைந்து காணப்படுகின்றன. எனவே, இதனை கருத்தினில் கொண்டு தசைநார்களை பின்வருமாறு வகைப்படுத்த முடிகின்றது.

A) *மெதுவாக இயங்கும் தசைநார்கள்* (S T F)

- இவை சிவப்பு நிறமானதாக் காணப்படும்.
- சுருங்கும் வேகம் குறைவானதாக காணப்படும்.

B) *விரைவாக இயங்கும் தசைநார்கள்* (F T F)

- இவை வெள்ளை நிறமாக காணப்படும்
- சுருங்கும் வேகம் அதிகமாக் காணப்படும்

இது இரண்டு வகையாக மேலும் வகுக்கப்பட்டுள்ளன.

B1- Fast Oxiditive -இது மிக வேகமாக செயற்படும் தசை நார்கள் ஆகும்.

B2- Fast Oxiditive Glycoytic- இது வேகமாக செயற்படும் தசைநார்கள் ஆகும்.

இத்தகைய தசைநார்களின் செயற்பாட்டின் மையமாகக் கொண்டு அவற்றின் தன்மைகளை சற்று நோக்குவோமாயின்

| தன்மைகள் | மெதுவாக செயற்படும் தசைநார்கள் | விரைவாக செயற்படும் தசைநார்கள் |
|---|---|---|
| நிறம் | சிவப்பு | வெள்ளை |
| இடைப்பரப்பு | குறைய | அதிகம் |
| குருதிநாளம் | அதிகம் | குறைவு |
| கிளைக்கோஜன் | குறைய | அதிகம் |
| சுருங்கும் வேகம் | குறைய | அதிகம் |
| காற்றுச் சுவாசம் | அதிகம் | குறைவு |
| காற்றின்றிய சுவாசம் | குறைவு | அதிகம் |
| களைப்பைத் தாங்குதல் | அதிகம் | குறைவு |
| இயக்க நரம்புத் தொடர்பு | குறைய | அதிகம் |
| வேகமாக அப்பியாசங்களில் ஈடுபடல் | குறைய | அதிகம் |
| நீண்ட நேர அப்பியாசத்தில் ஈடுபடல் | அதிகம் | குறைவு |

மேல் போன்ற தன்மைகளை தெளிவாக நோக்கும் பட்சத்தில் ஒவ்வொரு தனிநபருக்கும் இடையிலே காணப்படுகின்ற வேறுபாடுகள் புலனாகும். இத்தகைய வேறுபாடுகளை உள்வாங்கி அவற்றினை ஆய்வுசெய்து ஒவ்வொருவரையும் தகுந்த விளையாட்டுத்துறைக்கு வழிகாட்டி தகுதியான பயிற்சிகளை வழங்கவேண்டும். உதாரணமாக–


காற்றின்றிய சுவாசம் அதிகமாகவும் தசைநார்களின் சுருங்கும் தன்மை அதிகமாகவும் கிளைக்கோஜனளவு அதிகமாகவும் வேகமாக பயிற்சியில் ஈடுபடுதல் போன்ற தன்மைகளை தன்னகத்தே கொண்ட ஒருவரை நீண்ட தூர ஓட்டம், நீச்சல்போட்டி போன்ற விளையாட்டுத்துறைகளில் வழிகாட்டக்கூடாது.

அவ்வாறுவழிகாட்டுவது என்பது இறப்போம் என அறிந்து நஞ்சை உண்பதற்கு சமன் ஆகவே அவர்களை விரைவு ஓட்டம் கூடைப்பந்தாட்டம் போன்ற சாதகமான விளையாட்டுக்களில் ஈடுபடுத்தி வழிகாட்டுதல் என்பது ஏற்கனவே தெரிந்த வினாவிற்கு விடையளிப்பது போன்றதாகும்.

இதனால் அவர்கள் பொருத்தமான காலப் பகுதியினுள்ளே குறிப்பிட்ட இலக்கினை இலகுவாக எட்ட வாய்ப்பாக அமையும். எனவேதான் அந்தந்தத் தன்மைகள் கொண்ட பிள்ளைகளை அந்தந்த துறைகளினுள் ஈடுபடசெய்ய வேண்டும்.

மேலும் சற்று ஒருபடி மேலே சென்று தெளிவாக நோக்குமிடத்து தசைநார்களின் அமைப்பு விகிதத்திற்கும் விளையாட்டுத் துறைகளிற்கும் இடையே காணப்படுகின்ற தொடர்பானது ஒன்றுடன் ஒன்று எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை தெரிந்துகொள்ள முடியும்.


இதனை பின்வரும் வரைபடம் மூலம் நோக்குவோம்.




மேலே காணப்படும் விளக்கப் படத்தினை நோக்கும் போது சில விளையாட்டுக் களையும் அவற்றுக்கு வீரர்கள் கொண்டிருக்க வேண்டிய தசைநார்களினுடைய வீரத்தினை அறிய முடிகின்றது. அதிலிருந்து புலனாவது யாதெனில் பொருத்தமான விளையாட்டிற்கு யார் எந்தவகையான தசைநார்களை அதிகமானதாகக் கொண்டு இருக்கின்றாரோ அவர்கள் கண்டிப்பாக அவர்கள் அதனுடன் தொடர்புகொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடமுடியும்.

மேலே ஒரு சில விளையாட்டுக்களை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். இவ்வாறாக அனைத்து விளையாட்டுக்களும் அமையும்.

உதாரணமாக விரைவோட்ட வீரனாக இருக்கக் கூடிய ஒருவருக்கு மெதுவாக இயங்கும் தசைநார்களின் அளவு குறைவன விகிதத்திலும் வேகமாக இயங்கும் தசைநார்களின் அளவு அதிகமான விகிதத்திலும்



காணப்பட வேண்டும். மாறாக இருந்தால் அவர் அதற்குப் பொருத்தமற்றவர் ஆகிவிடுவார் .

அடுத்து முக்கியமான விடயம் இத்தசைநார்களின் தன்மைகள் அவற்றின் விகிதங்கள் போன்றவற்றை எவ்வாறு கண்டறிந்து கொள்ள முடியும் என்பதாகும் அதனைப் பின்வரும் பரிசோதனைமூலம் அறிந்து கொள்ள முடியும் Biopsy needle test என்பதாகும். அதாவது Biopsy needle ஐப் பயன்படுத்தி ஒரு துளி இரத்தத்தினை எடுத்து ஆய்வினை மேற்கொள்ள முடியும்.

செ.ஜொனிற்ரன்
(B.p.E.S,M.P.Ed,M.phil)


ஆகவே முழுமையாக தொகுத்து நோக்கும்போது இலகுவான முறையில் ஒரு உண்மை புலனாகின்றது. சிறு வயதினிலே ஒரு விடயத்தினை அறிந்து அதற்கான வழியினில் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் விரயங்கள் எதுவுமில்லாத வகையில் மிகவும் சாதுரியமாக உரிய துறையினில் சாதிக்க முடியும்.

மாறாகச் செயற்படுதல் என்பது முடவன் கொம்புத் தேனிற்கு ஆசைப்படுவது போல் ஆகிவிடும். எனவேதான் இந்தத் தசை நார்களின் அமைப்புகளைக் கொண்டு அவற்றிற்குப் பொருத்தமான விளையாட்டுத்துறைகளிலே பிள்ளைகளை ஈடுபடுத்த வேண்டும்.

இவ்வாறு ஈடுபடுத்துவதன் மூலம் வெற்றி நிச்சயம் கிடைக்கும். இந்த முறையானது மிக வேகமாக எமது அனைத்துப் பிரதேசங்களிற்கும் கிடைக்க வேண்டும் என்பது விளையாட்டுத்துறையின் ஆவலாகவுள்ளது.

# இனப்பரம்பல் அடிப்படையில் பிரதேசங்களை பிரிக்க முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இனப்பரம்பல் அடிப்படையில் பிரதேசங் களை பிரிக்க முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒரு பிரதேசத்தில் வாழும் இன விகிதாசார அடிப்படையில் அந்தப்பிரதேசத்தை பிரிப்பது பெருத்தமற்றது என அவர் சுட்டிக் காட் டியுள்ளார்.

இனப்பரம்பல் அடிப்படையில் பிரதேசங் களை பிளவு படுத்துமாறு அண்மையில் புத்திஜீவிகள் சிலர் விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

மேலும் வடக்கு மக்களுக்கு மட்டுமே தனியான அதிகார அலகு வழங்குவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஊழல் மோசடிகளை கண்டறியும் நோக்கில் விசேட ஆணைக்குழு ஒன்றை நிறு வுமாறு உலக நாடுகள் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளை அவர் நிராகரித்துள்ளார். (6)

# யுத்தம் முடிவடைந்ததையடுத்து இலங்கை வருமானத்தை அதிகரிக்க முயற்சி

## உலக வங்கியின் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை, 26 வருடகால சிவில் யுத்தம் முடிவுற்றதை அடுத்து அதன் வளங்களை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சியில் நாட்டின் வளர்ச்சியையும் வருமானத்தையும அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

ஆயுத மோதல்களை ஒரு முடிபுக்கு கொண்டு வந்தமை உண்மையில் தாழ்ந்த வருமான மட்டத்திலிருந்த நாட்டை பூரணமாக நடுத்தர வருமான மட்டத்திற்கு உயர்த்துவதற்கு கிடைத்த ஒரு வாய்ப்பாகும் என்று உலக வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் நவோகோ இஷி தெரிவித்துள்ளார்.

நிலையான உயர் வளர்ச்சி மட்டத்தை அடைவதற்கு இலங்கை அதன் வர்த்தகத் துறையை பலப்படுத்துவதோடு படித்த திறமை வாய்ந்த தொழிலாளர்களை உருவாக்க வேண்டும் என புளூம் பேர்க் செய்தி ஸ்தாபனம் விடுத்த கேள்விகளுக்கு மின்னஞ்சல் மூலம் அளித்த பதிலில் உலக வங்கியின் பணிப் பாளர் தெரிவித்தார்.

யுத்தம் முடிபுற்ற பின்னர் ஏற்கனவே 2.5 சதவீத மென கணிக்கப்பட்ட இந்த வருடத்திற்கான வளர்ச்சி விகிதத்தை மத்திய வங்கி தற் போது 4.5 சதவீத மென மதிப்பிட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டில் 900 டொலராகவும் , 2007 ஆம் ஆண்டில் 1.634 டொலராகவும் இருந்த தலா வருமானம் கடந்த வருடம் 2.014 டொலராக அதிகரித்தது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

(6)

# வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு செல்லும் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும்

## பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து வருவோர் மதவாச்சிக்கு அப்பால் செல்வதற்கு எம். ஓ.டி. கிளியரன்ஸ் எனப்படும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப்பெறவேண்டும் என்று தீர்மானம் தொடர்ந்தும் அமுலில் இருந்து வருவதாக இராணுவ ஊடகப்பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

வவுனியா , மன்னார் , திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கு செல்வதற்கும் பாது காப்பு அமைச்சின் அனுமதியைப்பெற்றே ஆகவேண்டும் எனவும் பிரிகேடியர் உதய நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

வன்னி மோதலில் சிக்கி இடம்பெயர்ந்து வந்து வவுனியாவில் உள்ள முகாம்களில இரண்டரை இலட்சத்திற்கு ம் அதிகமானோர் தங்கி உள்ளனர் . வெளிநாடுகளிலுள்ள இவர்களின் உறவினர்கள் இவர்களை பார்ப்பதற்காக இலங்கைக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

வவுனியாவிற்கு செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப்பெற வேண்டும் என்ற நடைமுறையை அறியாத நிலையில் வெளிநாடுகளில் இருந்து வரும் பெரும்பாலானோர் ரயிலிலும் வாகனங்களிலும் வவுனியாவை நோக்கி பயணிக்கின்றனர் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெறாத நிலையில் செல்லும் இவர்கள் மதவாச்சி சோதனை சாவடியில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டு மீண்டும் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

வாகனங்களைப் பெரும்செலவில் வாடகைக்கு அமர்த்திச் செல்லும் இவர்கள் மதவாச்சி சோதனைச் சாவடியில் வைத்து ஏமாற்றத்துடன் கொழும்புக்கு திரும்பி வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வரும் பெரும்பாலானோர் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெறாமல் வவுனியாவுக்கு செல்ல முயன்று மதவாச்சியில் ரயில் மற்றும் நெடுஞ்சாலை சோதனை சாவடிகளில்வைத்து மீண்டும் திருப்பிஅனுப்பும் நடவடிக்கை அன்றாட நிகழ்வாகி விட்டதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டிற்கு விமானத்திலோ கப்பலிலோ செல்ல பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப்பெற வேண்டும் என்பதை மட்டுமே தாங்கள் அறிந்திருந்ததாகவும் மதவாச்சிக்கு அப்பால் செல்ல பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற வேண்டும் என தாங்கள் அறிந்திருக்க வில்லை எனவும் வெளிநாடுகளில் இருந்து வந்து வவுனியாவுக்குச் செல்லும் வேளையில் மதவாச்சியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்ட பலர் தெரிவிக்கின்றனர் .

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் வெளிநாட்டு பிரஜைகள் யாழ். குடாநாட்டிற்கும் வவுனியா, திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களுக்கு செல்வதற்கான அனு மதியை பெறுவதற்கு பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அனுமதி கோரி விண்ணப்பிக்கும் போது கடவுச்சீட்டின் நகல் பிரதி ஒன்றையும் இணைக்க வேண்டும். அத்துடன் அப்பகுதிக்கு செல்வதற்கான காரணம் தங்கி இருக்கப் போகும் இடத்தின் காலம் தங்கி இருக்கும் கால எல்லை ஆகியவற்றை விண்ணபத்தில் குறிப்பிட வேண்டும். விண் ணப்பப்பத்திரத்தின் தபாலுறையில் செயலாளர் , பாதுகாப்பு , பொது மக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு, 15/5 பாலதக்ஷ மாவத்தை கொழும்பு 3 என குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்தை நேரடியாக அமைச் சில் ஒப்படைக்கலாம். அல்லது 011 232 8109 என்ற இலக்க தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (6)

# குவைத்துக்கு செல்வோருக்கு புதிய நடைமுறை அறிமுகம்

(கொழும்பு)

குவைத்துக்கு செல்ல வீசா கோரி விண்ணப்பிக்கும் அனைவரும் பொலிஸ் அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும் என புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி குவைத்துக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்லும் நோக்கில் வீசா கோரும் அனைவரும் பொலிஸ் அறிக் கையை சமர்ப்பித்தல் கட்டாயப்பட்டுள் ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த நடைமுறை அமுலுக்கு வரவுள்ளது.

எதிர்காலத்தில் குவைத் செல்லும் ஆண், பெண் இருபாலாருக்கும் பொலிஸ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே வீசா வழங்கப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார். (6)


# அந்தியேட்டி சபீண்டீகரண அழைப்பு

| அன்னை மடியில் | | அரன் திருவடியில் |
|---|---|---|
| 25 ❖ 05 ❖ 1931 |  | 23 ❖ 06 ❖ 2009 |

அமரர்

## தம்பையா சிதம்பரப்பிள்ளை

(தலைவர், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்)

அவர்களின் அந்தியேட்டி,சபீண்டீகரணக் கிரியைகள் 22.07.2009 ஆம் திகதி புதன்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் ,சுவட்டுறவாளர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது ஞாபகசக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் யாரையும் நாம் அழைக்கத் தவறியிருப்பின் அதனை பெருமனதுடன் மன்னித்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு மிக பணிவுடன் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினரும்
கட்டைவேலி நெல்லியடி
ப.நோ.கூ.சங்க சமுகத்தினரும்

விக்கினேஸ்வராக்கல்லூரி வீதி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

(சி/ 2666/இ/27)


# ஆசிரிய உதவியாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்க கல்வியமைச்சு இணக்கம்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மையில் நியமிக் கப்பட்ட ஆசிரியஉதவியாளர்களிற்கானசம்பளத்தை அதிகரிக்க கல்வியமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவினால்இந்த உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் மற்றும் புத்தளம் பகுதிகளில் 300 ற்கும் அதிகமான ஆசிரிய உதவியாளர்கள் நியமிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ் மாநகரசபைத் தேர்தல்களின் பின்னர் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 290 பேரிற்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்க விருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(6-14)


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 ❖ 02 ❖ 1942 |  | 16 ❖ 07 ❖ 2009 |

## திருமதி சிறீ அகிலாண்டதரநாதன் திருஞானசுந்தரம்

வவுனியாவைப் பிறப்பிடமாகவும், புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிறீ அகிலாண்டதரநாதன் திருஞானசுந்தரம் 16.07.2009 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் வீ. சிறீ அகிலாண்டதரநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் மோகனராஜன் (கனடா) , இந்திர புத்திரன் (புலோலி ப.நோ.கூ. சங்கம்), கேதீஸ்வரி (மீனா) , தேவராணி (சத்தியா) (லண்டன்), சிறிஞான கதிர்காமநாதன் (ராஜன்) (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவா (கனடா),சிவஜினி (பபா) , சதீசன் (கட் / நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்) , குல நாயகம் (லண்டன்) , கங்காதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபி ,அபிநயா, கௌசல்யா, அகிலன், ரதிசன், ரகீசன் ஆகியோரின் அன்புப் போர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 20.07.2009 திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சோழகிணற்றடி
புலோலி கிழக்கு,
புலோலி.

குடும்பத்தினர்.
தொ.பே-060 221 9306

(சி/2871)

# புத்தாண்டில் உங்கள் ஆடி மாதப் பலன்கள்

## துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள் வரை**

**எதிரிகளைக் கூட பேச்சாற்றலால் தன் வசமாக்கிக் கொள்ளும் துலாம் ராசி நேயர்களே!**

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கம் பொழுது சனி மற்றும் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லை ஏற்பட்டு அகலும். வைத்தியச் செலவு தவிர்க்க முடியாததாக இருக்கும். மாத தொடக்கத்திலேயே ராசி நாதன் சுக்ரன் அஷ்டமத்தில் பலம் பெறுகிறார். அத்தோடு தனாதிபதி செவ்வாய் இணைந்திருக்கிறார். எனவே, நண்பர்களிடம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

முன்னோர்களின் சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்களை வாங்க முன் வருவீர்கள். சகோதரர்கள் உதட்டில் ஒன்றும், உள்ளத்தில் ஒன்றும் வைத்து பேசுவதை அறிந்து கொள்வீர்கள். வாகன பழுதுகள் அதிகரிக்கும். வைத்திருக்கும் வாகனத்தை வைத்துக்கொள்வோமா? அல்லது வேறு புதிய வாகனம் வாங்குவோமா? என்ற சிந்தனை மேலோங்கும். சுய ஜாதகத்தில் தெசா புத்தி வலுப்பெற்றிருந்தால் இடமாற்றத்தையும் உப யோகப்படுத்திக் கொள்ளலாம். ஏறும் வாகனங்களையும் மாற்றி அமைத்துக் கொள்ளலாம். செவ்வாய் தோறும் முருகப்பெருமான் வழிபாட்டையும், யோக பலம்பெற்றநாளில் சர்ப்ப சாந்திகளையும் முறையாக செய்து வந்தால் தடைகள் அகலும் தன வரவும் திருப்தி தரும்.

ஜுலை 26ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். ராசிநாதன் ஒன்பதில் சஞ்சரிக்கும் இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும்.

தொழில் வளர்ச்சி கூடும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கரைந்த கையிருப்பை ஈடுகட்ட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

ஜுலை 27ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 9, 12க்கு அதிபதி 11இல் சஞ்சரிக்கும் பொழுது அந்நிய தேசத்திலிருந்து அனுகூலமான செய்தி வந்து சேரும். அஞ்சல் வழி தகவல் ஆச்சரியப்படவைக்கும் எண்ணியவுடன் எதையும் செய்ய வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். இதற்கு நண்பர்கள் கைகொடுத்து உத வுவர் விலகிச் சென்ற மாமன், மைத்துனன்கள் விரும்பிவந்து சேருவர்.

ஆகஸ்ட் 3ஆம் திகதி மகர ராசியில் குரு நீசம் பெற்றும், வக்ரம் பெற்றும் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பெற்றோர்களின் வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பூமி விற்பனையில் எதிர்பார்த்த இலாபம் கிடைப்பது அரிது. புதிய திருப்பங்கள் பலவும் சந்திக்கப் போகிறீர்கள். வியாபார விருத்தி ஏற்படும் என்றாலும், பங்கு தாரர்களுக்குள் பிரச்சினைகள் உருவாகும். போதுமான ஆதாயத்தை நீங்கள் பெற்றுக்கொண்டு பங்கு தாரர்களிடம் தொழிலை விட்டு விடுவது உங்களின் புத்திசாலித்தனமாகும்.

ஆகஸ்ட் 16ஆம் திகதி மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். தனாதிபதி ஒன்பதில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பணப் புழக்கம் அதிகரிக்கும். வீட்டு பராமரிப்பில் ஆர்வம் காட்டுங்கள்.

இம்மாதம் நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெற துர்க்கை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

## விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை**

**புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விருச்சிக ராசி நேயர்களே!**

ஆடி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் செவ்வாய் சுக்ரனுடன் இணைந்து சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும், புகழும் கூடும். இனத்தாரும், இணைந்திருப்பவர்களும் தோள் கொடுத்து உதவுவர். மனதளவில் நினைத்திருந்த காரியங்கள் ஒவ்வொன்றும் நடைபெற்றுக்கொண்டே வரும்.

தொழில் ஸ்தானத்தில் சனி பலம்பெற்று, குருவால் பார்க்கப்படுவதால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தொழில்வளம் பெருகும். புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி காண்பீர்கள் பழைய கடன்கள் வசூலாகும். சொத்துக்களால் ஆதாயம் அதிகரிக்கும் குடும்ப ஒற்றுமை கூடும்.

பொதுவாக 10, 11 க்கும் அதிபதி இணைந்திருக்கும் நேரத்தில் யோகங்கள் அதிகரிக்கும். அந்தஅடிப்படையில் இம்மாதக் கிரக நிலை அமைவதால் புகழ், கீர்த்தி, செல்வாக்கு மேலோங்கும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். நீண்ட நாள் ஆசை நிறை வேறும். வங்கிச் சேமிப்பு உயர்ந்து வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

ஜுலை 26ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 12க்கு அதிபதி சுக்ரன் 8இல் சஞ்சரிக்கும் பொழுது திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும் திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவுவர். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பழைய அணிகலன்களைக் கொடுத்து விட்டு புதிய அணிகலன்களை வாங்குவீர்கள் குடும்ப உறுப்பினர்கள் குதூகலமாக இருக்க வழிவகுத்துக் கொடுப்பீர்கள். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். வேற்று இனத்தவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத் துழைப் பாக இருப்பர்.

ஜுலை 27ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். லாபாதிபதி தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழிலில் வரும் இலாபம் இருமடங்காகும். பாடுபட்டதற்கு எற்ற பலன் கிடைக்கும். பயணங்களாலும் பலன் உண்டு. புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பொன்னான இந்த நேரத்தில் புதன் கிழமை தோறும் விஷ்ணு வழிபாட்டையும் மேற்கொண்டால் வெற்றி மீது வெற்றி காண இயலும்.

ஆகஸ்ட் 3ஆம் திகதி மகர ராசியில் குரு நீசம் பெற்றும், வக்ரம் பெற்றும் சஞ்சரிக்கப் போகிறார். சகாய ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்லமுடிவுக்கு வரும். குழந்தைகளின் கல்வி நலன் கருதியும் கல்யாண வாய்ப்புக் கருதியும் ஒரு தொகையைச் செலவிட்டு மகிழ்வீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும் குருவின் பார்வை பலத்தால் பாகப்பிரிவினைகள் சுமூகமாகும். உடன்பிறப்புகள் ஒத்துவருவர்.

ஆகஸ்ட் 14இல் மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இக் காலத்தில் விழிப்புணர்ச்சியுடன் இருந்தால் விரயங்களிலிருந்து விடுபடலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியம் சீராகும்.

இம்மாதம் எல்லா நாட்களும் நல்ல நாட்களாக மாற செவ்வாய் தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். (தொடரும்)

**சிவல்புரி சிங்காரம்**

# மடுமாதா உற்சவத்தை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

மன்னார் மடு மாதா தேவாலய உற்சவத்திற்கான ஏற்பாடுகள் என்றும் இல்லாதவாறு மிக பிரமாண்டமான அளவில் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மடுமாதா உற்சவம் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி நிறைவு பெறும்.

கடந்த காலங்களில் பாதுகாப்புக் காரணங்களினால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பக்தர்களே சென்று தரிசித்து வந்த இவ்வுற்சவத்திற்கு இம்முறை பல இலட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன் அவர்களுக்கான தங்குமிடம், சுகாதாரம், போக்குவரத்து வசதிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான கூட்டமொன்று கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட அரச செயலகத்தில் மன்னார் மாவட்ட அரச அதிபர் நிக்கெலாஸ் பிள்ளை தலைமையில் இடம் பெற்றுள்ளது. இக்கூட்டத்தில் மன்னார். ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை, சமய விவகாரங்களுக்கான அமைச்சர் பந்து பண்டார நாயக்க, அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ ஆகி யோர் கலந்து கொண்டனர்.



இக்கூட்டத்தில் மடுமாதா உற்சவ கால பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடப் பட்டதுடன் அதற்கான ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (6)

# நிதியியலாளர்களுடனான கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கையின் நிதியியல் புலனாய்வுத் துறையினர் நேபாளம் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் நிதியியலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

புரிந்துணர்வு அடிப்படையிலேயே இந்தக் கலந் துரையாடல் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பயங்கரவாதத்திற்காக சட்ட விரோதமாக நிதிப்பங்களிப்புச் செய்யப்படுதல் போன்ற விடயங்கள் குறித்தும் கலந் துரையாடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (6-14)

# நலன்புரி முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலை குறித்து அறிய நல்லெண்ணக் குழு

## பாரதீய ஜனதா கட்சி ஆலோசனை

(புதுடில்லி)

இலங்கையில் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் சுமார் 3 இலட்சம் தமிழர்களின் நிலைகுறித்து நேரில் கண்டறிய நல்லெண்ணக்குழு ஒன்றை அமைக்க இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி ஆலோசித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக அக்கட்சியின் உயர் மட்டக்குழுவைச் சேர்ந்த ஒரு முக்கிய தலைவரின் தலைமையில் 5 பேர் கொண்ட குழு விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்று பா.ஜ.க தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை இலங்கைத் தூதரிடம் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதை நேரில் வலியுறுத்தி னார்கள். இந்தியா பவுண்டேசன் என்ற அமைப் பின் சார்பில் இலங்கைத்தமிழர் பிரச்சினை குறித்து ஆலோ சனைக் கூட்டம் டில்லியில் பா.ஜ.க. மூத்த தலைவர் வெங்கையா நாயுடு இல்லத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பா.ஜ.க. எம்பிக்கள் 25 பேரும் ஆர்.எஸ்.எஸ் மூத்த தலைவர்களும் கலந்து கொண்டனர். இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் ஜயசிங்கவுக்கு இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு உணவு, உடை வழங்குவதுடன் அவர்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்று பா.ஜனதா, ஆர்.எஸ்.எஸ் சார்பாக வலியுறுத்தப்பட்டது. (6)

# முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்த நிரந்தரக் குடியிருப்பாளர்களை மீளக் குடியமர்த்துவதற்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மோதலின் போது இடம்பெயர்ந்துள்ள மாவட்டத்தின் நிரந்தரக்குடியிருப்பாளர்களான 28 ஆயிரத்து 473 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 56 பேரை குடியேற்றுவதற்கு அடிப்படை வசதிகளுக்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலின் பேரில் அடிப்படை வசதிகள் தொடர்பான மதிப்பீடு, சேதமடைந்த வீடுகள், கட்டடங்கள், வீதிகள் ஆகியவற்றின் விபரங்கள் சேகரித்தல் போன்ற நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சேதமடைந்துள்ள கிராம வீதிகளை புனர் அமைப்பதற்காக 125 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலம் உடனடியாக கிராம வீதிகளை திருத்துவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதைத்து வைத்திருக்கும் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார். இதேவேளை கிளிநொச்சி, முல் லைத் தீவு மாவட்டத்தில் உள்ள வயல்கள், பயிர்ச் செய்கைத் தோட்டங்கள் ஆகியவற்றில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை முதலில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மீள் குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது. (6)

யானை சேற்றில் புதையும்போது தவளையும் எட்டி உதைக்கும்.

– பஞ்சதந்திரம்

வலம்புரி

## தென் பகுதியில் சிங்கள மக்கள் தமிழர்களை உதாசீனம் செய்கின்றனரா?

வன்னி யுத்தத்தில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தென்பகுதி சிங்கள மக்களின் நடவடிக்கைகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

தமிழ் மக்களை உதாசீனம் செய்வது, புலிகளை சுட்டிக்காட்டிக் கேலி செய்வது, இளம் பெண்கள் மீது சேட்டை விடுவது என தமிழ் மக்களின் மனதை நோகடிக்க வைக்கும் செயல்களில் சிங்களவர்கள் ஈடுபடுவதான தகவல்கள் மிகப் பெரும் வேதனையை தருகின்றது.

எல்லாளனுடன் நேருக்கு நேர் போரிட்டு அவனின் வீரத்திற்கு அனைவரும் வணக்கம் செலுத்த வேண்டுமென உத்தரவிட்ட துட்டகைமுனுவின் பரம்பரை என்று சொல்லிக் கொள்பவர்கள் மிகக் கீழ் நிலைத்தனத்தில் செயற்படுவது இன ஒற்றுமைக்கு ஆரோக்கியமானதல்ல.

சிங்கள–தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழும் சூழ்நிலையை உருவாக்க வேண்டிய பொறுப்பு சிங்கள அரசுகளையே சார்ந்துள்ளது.

எனினும் சிங்கள ஆட்சியாளர்கள் இன ஒற்றுமை பற்றி இம்மியும் சிந்திக்கவில்லை.

அப்படியான சிந்தனை எழுந்தால் கூட அதனை பௌத்த சிங்கள துரோகம் எனக் கூறி அமுக்கிவிடும் நடவடிக்கைகள் தாராளமாக நடந்தன.

இந்நிலையிலேயே தமிழ் மக்கள் தமது சுய நிர்ணயம் பற்றி சிந்திக்க வேண்டியவர்களானார்கள்.

இருந்தும் அவர்களின் சுய நிர்ணய உரிமைக்கான பாதை அகிம்சை வழியினூடாகவே ஆரம்பிக்கப்பட்டது.

அந்த அகிம்சை வழிப்போராட்டத்திற்கு சிங்கள ஆட்சியாளர்கள் வழங்கிய கௌரவம் எத்தன்மையானதென்பதை சிங்கள மக்கள் ஒருபோதும் மறந்து விடலாகாது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்றவுடன் தமிழர்களை கேலி செய்வது சிங்கள இனத்துக்கு அவமானத்தை ஏற்படுத்தக் கூடியது.

உலகின் வரலாறுகள் எங்கள் ஆயுட் காலங்களுடனும், எங்கள் சாதனைகளுடனும் சம்பந்தப்பட்டவையல்ல.

அவை நீண்ட காலப் பாரம்பரியத்தை கொண்டவை.

இன்றைய நிஜங்கள் நாளை தலைகீழாக மாற்றமடையக் கூடியவை. இதுவே இன்றைய உலகில் நடந்தவண்ணமுள்ளது.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் அழிந்து விட்டார்கள். நாம் தமிழர்களை கேலியும் கிண்டலும் செய்யலாம். எம்மை தட்டிக் கேட்க யாரும் இல்லை என்ற சிறுமைத்தனமான நினைப்பை கைவிடுவது அனைவருக்கும் நல்லது.

இது விடயத்தில் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

# வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவைக்கந்தனின் தேர்த்திருவிழா இன்றாகும்



வரலாற்றுச்சிறப்பு மிக்க மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயில் முருக வழிபாட்டுத்தலங்களில் முக்கியத்துவம் பெறுகின்து. இக்கோயில் கி.பி 9 ஆம் நூற்றாண்டில் சோழநாட்டு உக்கிர சோழ மன்னன் மகள் மாருதப்புரவீக வல்லியினால் கட்டப்பட்டது. குதிரை முகம் நீங்கி அருள் பாலித்த முருகன் தலம் கோயிற் கடவை பின்னர் மாவிட்டபுரம் எனும் மறுநாமம் பெற்றது.

இவ்வாலய மஹோற்சவம் ஆண்டு தோறும் ஆனிமாத பூர்வபட்ச சஷ்டித் திதியோடு கொடியேற்றம் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் பெருந்திருவிழாவாக நடைபெறும். ஆடி அமாவாசையில் தீர்த்த உற்சவம் புண்ணிய கீரிமலை தீர்த்தத்தில் நடைபெறும். இதற்கு முதல் நாள் தேர் உற்சவம் நடைபெறும்.

தேர்த் திருவிழாவில் பஞ்ச மூர்த்திகளாகிய விநாயகர், சுப்பிரமணியர், சந்திரசேகரர், ஆறுமுகசுவாமி, சண்டேஸ்வரர், ஐந்து தேர்களில் திரு உலா வரும் அற்புதக் காட்சியாக அமையும். இன்று அந்த ஒழுங்குகள் இல்லை. ஆறு முகசுவாமியின் திருத்தேர் தான் வருவதைக் காணமுடியும்.

மாவைக்கந்தன் மீது செஞ்சொற் பாமாலைகள் பாடிய புலவர்களில் முத்துக்குமார கவிராயர், இருபாலை சேனாதிராச முதலியார், சுன்னாகம் குமாரசாமிப் புலவர், மயில்வாகனப் புலவர், வணமுத்துப்புலவர், கோப்பாய் சபாபதி நாவலர், ம.க. வேற் பிள்ளை, நாவாலியூர் சோமசுந்தரப்புலவர், கல்லடி வேலுப் பிள்ளை, வித்துவான் கணேசையர், அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இவர்களைப் போன்று பண்டிதர் சச்சிதானந்தம் தமிழருவி சண்முகசுந்தரம் ஆகியோரும் கோயில் வீதியிலே வாழ்ந்து மாவை முருகன் பெரும்புகழைப் பாடியவர்களாவர்.

1829 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி நாள் அன்று மாவை முருகப் பெருமான் எழுந்தருளி தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலுக்கு வந்து வன்னி–வாழை வெட்டும் மானம்பூ உற்சவம் நடை பெற்று வந்தது. ஆயினும் நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் இன்று தடை ஏற்பட்டுள்ளது. இதனால் ஒரு சில ஆண்டுகள் மாவை முருகப் பெருமானின் வேல் துர்க்கை அம்மன் கோவில் வசந்த மண்டபத்தில் வைத்து மஹோற்சவ காலத்தில் பூசை வழிபாடுகள் இயற்றப்பட்டது.

இதனால் *துர்க்கா புஸ்கரணி* தீர்த்தத் தடாகத்தில் ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் மாவை முருகவேற் பெருமானுக்கு நடை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கா. சிவபாலன்**

## பாடநூல்களின் சுமையை குறைக்க கல்வியமைச்சு தீர்மானம்

பாடசாலை மாணவர்களுக்கு பாடநூல்களின் சுமையை குறைப்பதற்காக அவற்றை 2 பிரிவுகளாக அச்சிடுவதற்கு கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

மாணவர்கள் குறைந்த பக்கங்களைக் கொண்ட பயிற்சி புத்தகங்களை பயன் படுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளாந்தம் பாட சாலை மாணவர்கள் பயன்படுத்தும் பயிற்சி புத்தகங்களின் பக்க எண்ணிக்கையை மதிப்பீடு செய்து இந்த வழிகாட்டலை செய்வதற்குகல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை பாடசாலை மாணவர்களின் புத்தகப்பையின் நிறையை குறைப்பதற்கான 16 பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு கல்வி அமைச்சு தயாராகி வருகிறது. (6-4)

## இரணைமடு நீர்ப்பாசனத் திட்ட வேலைகள் அடுத்த ஆண்டிற்கு முன்னர் நிறைவு

## செயற்றிட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நீரை விநியோகிக்கும் இரணைமடு நீர்ப்பாசனத் திட்டம் அடுத்த ஆண்டுக்கு முன்னர் நிறைவுசெய்யப்படும் என்று அதன் செயற்றிட்ட பணிப்பாளர் பி.எஸ். சுகததாஸ தெரிவித்துள்ளார்.

இதற்கென் யாழ்.குடாநாடு வரையான 43 கிலோமீற்றர் தூரத்திற்கு குழாய் இணைப்பு மேற்கொள்ளப்படுகிறது. வட பகுதி மக்களை மீளக்குடியமர்த்தும்போது தேவையான குடிநீர் விநியோகத்தினை வழங்குவது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் வடமாகாணத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டங்கள், ஹோட்டல்களுக்கு தேவையான நீரை விநியோகிப்பதும் இதன் மற்றொரு நோக்கமாகும்.

இந்தத் திட்டத்திற்கென 100 கோடி ரூபா செலவிடப்படுகின்றது. (6-4)

## அமைச்சர்களின் பாதுகாப்பை குறைப்பதற்கு தீர்மானம்

(கொழும்பு)

விடுதலைப்புலிக்ளை முற்றாக அழித்திருப்பதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருக்கும் நிலையில் அமைச்சர்களுக்கு வழங்கும் பாதுகாப்பைக் குறைப்பது குறித்தும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சரத்பெ ரேரா அமைச்சர்கள் மற்றும் அமைச்சர் களின் செயலாள்ர்களுக்கான பாதுகாப்பைக் குறைப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

இதுவரை காலமும் அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதால் அவர்களின் பாதுகாப்புக் குறித்துப் பொலிஸார் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் தற்பொழுது அவர்களுக் கிருந்த அச் சுறுத்தல் குறைந்திருப்பதால் மேலதிக மாக வழங்கப்பட்ட பாதுகாப்பைக் குறைத்துக்கொள்வது பற்றிப் பொலிஸார் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது. (6)

### காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் முதலாவது தேர்த்திருவிழா இன்றாகும்

## மாட்சிமிகு தேரினில் வருவீரப்பா

திருவளர் காரை நாட்டில்
திகழும் குடபால் மேவும்
பெருவெளி என்று சான்றோர்
பேசிடும் வியாவில் வைப்பில்
அருளினை சொரிந்து நிற்கும்
அரிகரத் தெய்வம் நீங்கள் !
பொருளது பலவும் சேர்த்து
புதுக்கிய தேரில் வாரீர் !
கோட்டனார் செய்த கோயில்
கொடியவர் அழித்திட்டாலும்
ஆட்சியும் அருளும் பொங்க
அழகுற அமர்ந்த ஈசா!
மாட்சியே மிகுந்த தேரில்
மாதர்க ளிருவர் சேரக்
காட்சியே தருவீர ப்பா !
கருணையும் புரிவீர ப்பா!

வே.குமாரசுவாமி
காரைநகர்.

### இன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா

மாவைக் கந்தனே ! வள்ளலாய் வந்த வடிவேலன் நீயே !

மயிலேறும் மயில் வாகனன் மாவைக்கந்தன் !
மாவிட்ட புரம் வீற்றிருக்கும் மாவைக்கந்தன் !
மாருதப்புர வல்லியின் துயர் தீர்த்த அழகன்!
அழகு முகம் கொடுத்த முருகனே நீ !
வேல் கொண்டு கலி தீர்த்த வரதன் நீ!
கந்தனாக கடம்பனாக காட்சி தந்தாய் !
ஆனந்தமாய் வாழ வழியும் செய்வாய் !
தேரினில் ஏறி பாரினைக்காப்பாய் !
கந்தனே உன்னைப் பாடுவேன் நாளும் !
பக்தியே எங்கள் பரவசமாக !
வந்தனை செய்து காத்திடு வேலா !
வள்ளலாய் வந்த வடிவேலன் நீயே !

ச.நாளஜினி
சுன்னாகம்.

## சுவாமி விவேகானந்தரின் எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்



நாம் இதுவரை நினைத்து வந்த எல்லோரும் உடம்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்ற உலகம் நம்முடைய கற்பனையில் தோன்றிய பொய்யான உலகம் .அதை விட்டு விடுங்கள். நன்றாகக் கண் களைத் திறந்து பாருங்கள். இப்படிப்பட்ட ஓர் உலகம் எப்போதுமே இருக்க வில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அது ஒரு கனவு, மாயை இருந்தது. கடவுள் மட்டுமே குழந்தையில், மனைவியில், கணவனில் எல்லாவற்றிலும் இருப்பவர் அவரே. நல்லவரில் இருப் பதும் அவரே. தீயவரில் இருப்பதும் அவரே. பாவத்தில் இருப்பதும் அவரே. பாவியாக இருப்பதும் அவரே. வாழ்விலும் அவரே இருக்கிறார் சாவிலும் அவரே இருக்கிறார்.

உண்மையிலேயே துணிச்சலான கருத்துத்தான். ஆனாலும் வேதாந்தம் இந்தக் கருத்தைத்தான் பிரச்சாரம் செய்ய செயலில் காட்டவிரும்புகிறது. இது வெறும் ஆரம்பம் மட்டுமே இவ்வாறு நாம் வாழ்க்கையின் அபாயங்களையும் தீமைகளையும் விலக்குகிறோம்.

# தேர்தலில் போட்டியிடுவதற்கான தடையிலிருந்து பாக். எதிர்க்கட்சித் தலைவர் நவாஸ் ஷெரீப் விடுவிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் நவாஸ் ஷெரீப் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர் கொண்டிருந்த இறுதித் தடையை அந்நாட்டு



உச்சநீதிமன்றம் வெள்ளிக்கிழமை நீக்கி யுள்ளது.

1999ஆம் ஆண்டு முன்னாள் இராணுவத் தலைவர் ஜெனரல் முஷாரப்பின் விமானத்தை தரையிறங்க விடாது தடுத்தமை தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் நவாஸ் ஷெரிப் பிற்கு தேர்தலில் போட்டியிடவும் அரசாங்கப் பதவியை வகிக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அச்சமயம் ஷெரீப்பின் அரசாங்கம் முஷராப்பின் விமானத்தை கராச்சியில் தரையிறங்க விடாது தடுத்து சிந்து மாகாணத்திலுள்ள சிறிய நகருக்கு செல்ல உத்தரவிட்டது.

எனினும் உடனடியாக இராணுவ புரட்சி மூலம் நவாஸ் ஷெரீப் ஆட்சி கவிழ்க்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். இந் நிலையில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற முஷாரப்புடனான உடன்படிக்கையொன்றின் கீழ் அவர் நாடு கடத்தப்பட்டார்.

கடந்த ஆண்டு நாடுதிரும்பிய நவாஸ்ஷெரீப் நீதிமன்ற உத்தரவொன்றின் பிரகாரம் தேர்தலில் போட்டியிடுவதற்கு தடையை எதிர் கொண்டார்.

இந் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் முஷாரப்பின் விமானத்தை கடத்துவதற்கு ஷெரீப் ஆதரவு வழங்கினார் என்பதற்கு எதுவித ஆதாரமுமில்லை எனக் கூறி அவரை அக் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்துள்ளது.

நீதிபதி தஸாதுக் ஹுஸைன் ஜிலானி தலைமையிலான 5 நீதிபதிகளைக் கொண்ட குழுவே கடந்த ஜுன் மாதம் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி முறைப்பாட்டை விசாரித்தது.

இந்த தீர்ப்பு குறித்து நவாஸின் பி.எம்.எல்.என் கட்சி வரவேற்பளித்துள்ளது.

இதன் பிரகாரம் 2013ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலோ அல்லது அதற்கு முன் நடைபெறும் பாராளுமன்ற இடைத் தேர்தல்களிலோ நவாஸ் ஷெரீப் போட்டியிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# ஈரானிய அணுசக்தி அமைப்பின் புதிய தலைவராக அக்பர் நியமனம்



ஈரானின் அணுசக்தி அமைப்பின் புதிய தலைவராக சர்வதேச அணு சக்தி முகவர் நிலையத்துக்கான ஈரானின் முன்னாள் தூதுவர் அலி அக்பர் சலேகியை அந்நாட்டு ஜனாதிபதி மஹ்மூத் அஹமட் நிஜாத் நியமித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி அமைப்பின் தலைவராக நீண்ட காலம் சேவையாற்றிய கொலாம் ரெஸா அக்ஹஸாடஹ் தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்தே இவரது நியமனம் இடம் பெற்றுள்ளது.


ரெஸாவின் இராஜினாமாவுக்கான காரணம் குறித்து இது வரை தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

ஈரானிய அணுசக்தி அமைப்பானது மேற்படி பதவி விலகலுக்கான காரணம் குறித்து ரெஸா அக்ஹஸாடஹ் எதுவித தகவலையும் வெளியிடவில்லை எனவும் தனது கடிதத்தை ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மட நிஜாத் ஏற்றுக் கொண்டதாக மட்டுமே தெரிவித்ததாகவும் கூறினார்.

இந் நிலையில் அவரது பதவி விலகலுக்கும் கடந்த ஜுன் 12ஆம் திகதி நடைபெற்ற சர்ச்சைக்குரிய ஜனாதிபதித் தேர்தலுக்கும் தொடர்பிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (6)

# கல்லறைகளுக்கு நடுவில் அமைந்துள்ள வினோத பள்ளி

(ராமநாதபுரம்)



கல்லறைகளை தடுப்பு சுவராகவும் தளமாகவும் கொண்ட 100 ஆண்டுகளைக் கடந்த வினோத பள்ளியில் பயிலும் குழந்தைகள் சிறப்பாக செயல்படுகின்றனர். இராமநாதபுரம் வடக்குத் தெருவில் சி.எஸ்.ஐ தொடக்கப் பள்ளியில் உள்ளது. கடந்த 1896 இல் பிரிட்டீஸ் இராணுவ அதிகாரிகளால் இப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

இராணுவ அதிகாரிகள் இறப்புக்குப்பின் இவர்களது உடல்கள் பள்ளி அருகில் கல்லறை எழுப்பி அடக்கம் செய்யப்பட்டது. அவர்கள் வழி வந்தவர்கள் பள்ளியை விரிவுபடுத்தும் நோக்கில் கட்டடங்களை எழுப்ப முன்வந்தனர். கல்லறைகள் இடையூறாக இருந்ததால் வேறு வழியின்றி அவற்றின் மீதே கட்டடம் கட்டப்பட்டது. அதன் விளைவு இன்றுள்ள பள்ளியின்சுவர், சுற்றுச் சுவர், தளம், தூண் என அனைத்தும் கல்லறையின் மத்தியில் அமைந்துள்ளது.

இன்று நூற்றுக்கணக்கான குழந்தைகள் இங்கு படித்து வருகின்றனர். கல்லறை என்ற பீதி இல்லாமல் பெற்றோரும் குழந்தைகளை அனுமதிப்பதால் குழந்தைகள் தயக்கமின்றி படித்து வருகின்றனர். பள்ளிக் குழந்தைகள் கல்லறைகளில்விளையாடி மகிழ்கின்றனர். (6)

# அமெரிக்காவில் இரு பயணிகள் ரயில்கள் மோதிக் கொண்டதில் 60 பேர் படுகாயம்


(சான்பிரான்சிஸ்கோ)

அமெரிக்காவில் உள்ள சான்பிரான் சிஸ்கோவில் 2 பயணிகள் ரயில்கள் மோதிக் கொண்டன.

அங்குள்ள வெஸ்ட்போர்ட்ஸ் ரயில் நிலையத்தில் வைத்து இந்த விபத்து நடந்தது. இதில் 60 பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

இவர் களில் 3 பேர் நிலைமை கவலைக் கிடமாகவுள்ளது.

இரு ரயில்களும் மெது வாக சென்ற போது இந்த விபத்து நடந்தது. இல்லை என்றால் பெரிய அளவில் உயிரிழப்பு ஏற்பட்டு



இருக்கும் என்றுஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (6)

# பாகிஸ்தானில் விமானத் தாக்குதல் 14 பயங்கரவாதிகள் பலி

பாகிஸ்தானில் அமெரிக்கா மற்றும் பாகிஸ் தான் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் பயங்கரவாத அமைப்பின் தலைமை அதிகாரி உட்பட 14 பேர் பலியா கினர். பாகிஸ்தானின் தெற்கு வாசீரிஸ்தான் லாதா பகுதியில் அமெரிக்க விமானம் நடத்திய இரண்டு ஏவுகணைத் தாக்குதலில் பயங்கரவாத அமைப்பு ஒன் றின் தலைமை அதி காரி யான அப்துல்லா ஷா மெக்சூத் என்ப வன் பலியானான். மெக் சூத்தின் வீட்டில் பயங்கரவாதிகள் பங்கேற்ற கூட்டம் நடந்த போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவத்தில் மேலும் நான்கு பேர் காயமடைந்தனர். இதேபோல் இங்குள்ள மாமோசாய பகுதியில் பயங்கரவாதிகளின் மறைவிடங்களை குறி வைத்து பாகிஸ்தான் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 13 பயங்கரவாதிகள் பலியாயினர். பயங்கரவாதிகளின் மூன்று மறை விடங் களும் அழிக்கப்பட்டன. (6)

# சீனாவின் எதிர்ப்பையும் மீறி தலாய்லாமாவை சந்திக்கவுள்ள ஒபாமா

திபெத் நாட்டை சீனா வலுக்கட்டாய மாக ஆக்கிரமித்து தங்கள் நாட்டோடு இணைத்துக்கொண்டது. திபெத் தலைவர் தலாய்லாமா இந்தியாவில் வசித்து வருகிறார் திபெத்தை சுதந்திர நாடாக அறிவிக்கக்கோரி அவர் போராடி வருகிறார்.

தலாய்லாமாவுடன் எந்த நாடும் உறவு வைத திருந்தாலும் அந்த நாட்டை சீனா எதிரியாக கருதுகிறது. தலாய்லாமாவை சந்திக்கும் மற்ற நாட்டு தலைவர்களையும் எச்சரித்து வருகிறது. இந்த நிலையில் தலாய்லாமாவை அமெரிக்க அதிபர் ஒபாமா சந்திக்க முடிவு செய்தார். இதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்தது கடந்த ஏப்ரல் மாதம் எச்சரிக்கையும் விடுத்தது. இதையும் மீறி தலாய்லாமாவை சந்திக்க ஒபாமா முடிவு செய்துள்ளார். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தலாய்லாமா அமெரிக்கா செல்லவுள்ளார். அப்போது இந்த சந்திப்பு நடக்கவுள்ளது. இதற்காக அமெரிக்க அரசு தலாய்லாமாவுடன் தொடர்பு கொண்டுள்ளது. (6)


ஓம் சக்தி துணை

**திருத்தேர் வெள்ளோட்ட விழா**

யா/ அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில்

நிகழும் விரோதி வருடம் ஆடி மாதம் 6 ஆம் நாள் (22.07.2009) புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கும் 3.00 மணிக்கும் இடைப் பட்ட நேரத்தில் திருத்தேர் வெள்ளோட்டம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

**நிகழ்ச்சி நிரல்**

1.ஆசியுரை : • கோவில் பிரதம குரு சிவ ஸ்ரீ .கு.சோமசுந்தரக் குருக்கள்
• மஹோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ .சு.முரளீதரக் குருக்கள்
• நல்லை ஆதீன முதல்வர்- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார்

2.சிறப்புரை: • பேராசிரியர் கலாநிதி R.குமாரவடிவேல் (B.Sc.(Hon) PHD (Bristol) யாழ். பல்கலைக்கழகம்.
• செஞ்சொற் செல்வர் திரு ஆறுதிருமுருகன் (B.A) அதிபர் யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி, சுன்னாகம். தலைவர் ,தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானம்.

3.கௌரவிப்பு: • ருத்திராகார தேர் சிற்பாசாரி ஸ்தபதி அராலியூர் விஸ்வப் பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்கள்
• தேர்முட்டி அமைப்பாளர் பிரகா கொன்ஸ்ரக்சன் பிறைவேட் லிமிட்டெட் திரு.சுப்பிரமணியம் கமலநாதன் அவர்கள்

4.நன்றியுரை: கௌரவ செயலாளர்.

அடியார்கள் அனைவரும் திரண்டு வந்து அம்பாளின் வடம் பிடித்து சொர்க்கத்தில் இடம் பிடிக்க பரிபாலன சபையினர் அன்புடன் அழைக்கின்றனர்.

85 ,இலந்தைக் குளம் வீதி,
அரியாலை
20.07.2009
(2972)

பரிபாலன சபை
யா/அரியாலை
பிரப்பங்குளம் மகாமாரி
அம்மன் கோவில்.


# ஈழத் தமிழர்களை மீட்க மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இயக்குநர் சீமான்



இலங்கையில் முகாம்களில் சிறைப் பட்டுள்ள ஈழத் தமிழர்களை மீட்க மத்திய அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரைப்பட இயக்குநர் சீமான் வலியுறுத்தி பேசினார்.

"நாம் தமிழர்" அமைப்பு சார்பில் மதுரையில் சனிக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது,

இந்த "நாம் தமிழர்" இயக்கமானது கட்சி, மதம் சார்பற்றது, ஈழத் தமிழர்களுக்காக ஒரு மித்த குரல் கொடுக்க தமிழர்களை ஒன்று திரட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சுய நல மற்ற ஓர் அமைப்பாகும்.

இலங்கையில் 3.50 இலட்சம் தமிழர்கள் போரினால் பாதிக்கப்பட்டு சொந்த மண்ணிலேயே முகாம்களில்இலங்கை அரசால் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் போதிய கழிப்பறை, குடிநீர், சுகாதாரம் வசதிகள் இன்மையால் மிகவும் இன்னல்படுகின்றனர்.


முகாம்களில் உள்ள அவர் களை மீட்டு சொந்த மண்ணில் குடிய மர்த்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு சம உரிமை, அதிகாரப் பகிர்வு அளிக்கப்படும் என்று இலங்கை அரசு இந் திய அரசையும், சர்வதேச சமூகத் தையும் ஏமாற்றுகின்றது. இவ் விஷயத்தில் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றார்.

இக் கூட்டத்தில் அகதி முகாம்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள 18 பேர் கொண்ட குழுவை கலைத்துவிட்டு சர்வதேச நிறுவனங்களிடம் நிர்வாக பொறுப்பை அளிக்க இந்தியா மற்றும் சர்வதேச நாடுகள் வலியுறுத்த வேண்டும்.

இலங்கை அரசுக்கு மத்திய அரசும், தமிழக அரசும் அளித்துள்ள ரூ500 கோடி நிதி உதவியை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. (6)

# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து சமிந்த வாஸ் ஓய்வு பெறுகிறார்



இலங்கை-பாகிஸ்தான் அணி களுக்கிடையில் எஸ்.எஸ்.சி. மை தானத்தில் இன்று ஆரம்பமாகும்

மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியுடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் அறிவித் துள்ளார்.

எனினும் அவர் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டி வரை ஒரு நாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் தொடர்ந்தும் இலங்கை அணிக்கு விளையாட திட் டமிட்டுள்ளார்.

எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நேற்று நடந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அண்மைக்காலமாக இலங்கை அணியில் இடம் பிடிக்க தவறிவந்த சமிந்த வாஸ், டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அண்மையில் இலங்கை அணி யின் தேர்வுக்குழுத் தலைவர் அஜ ந்த டி மெல் தெரிவித்திருந்தார்.

எனினும் இந்த அறிவிப்புக்கு சமிந்த வாஸ் அப்போது மறுப்பு தெரி வித்திருந்தார்.

இதனிடையே பாகிஸ்தானுட னான டெஸ்ட் தொடருக்கு மீண்டும் அழைக்கப்பட்ட நிலையிலேயே வாஸ் தனது ஓய்வு அறிவிப்பை வெளி யிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

35 வயதான சமிந்த வாஸ் இல ங்கை அணிக்காக 110 டெஸ்ட் போட் டிகளில் விளையாடி 354 விக்கெட் டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இது தவிர அவர் டெஸ்ட் சதம் ஒன்றையும் பதிவு செய்து கொண் டுள்ளமை விசேட அம்சமாகும்.

# மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் பாக். வீரர்களுக்கு அனுமதிகிடைக்கும்

## சொகையில் தான்வீர் நம்பிக்கை

(கராச்சி)

அடுத்த ஆண்டு நடக்கவிருக் கும் ஐ.பி. எல்.தொடரில் பாகிஸ்தான் அணி வீரர்களுக்கு வாய்ப்புக் கிடைக் கும் எனவேகப்பந்து வீச்சாளர் சொகை யில் தான்வீர் நம்பிக்கை தெரிவித் துள்ளார்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் இரண்டாவது இருபது -20 கிரிக்கெட் தொடர் சமீபத்தில் தென்னா பிரிக்காவில் நடந்தது.

இதில் பாதுகாப்பு காரணங் களுக் காக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.) அந்நாட்டு வீரர் களை விளையாட அனுமதிக்க வில்லை.

சமீபத்தில் லோட்சில் வேல்ஸ் இளவரசர் அறக்கட்டளை சார்பில் பிரிட்டிஷ்-ஆசியக் கோப்பை தொடர் நடந்தது. இதில் இங்கிலாந்து உள் நாட்டு இருபது-20 சம்பியன் மிடில் செக்ஸ் அணியை முன்னாள் (2008) ஐ.பி.எல். சம்பியன் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீழ்த்தியது.

இது குறித்து ராஜஸ்தான் றோய ல்ஸ் அணி வீரர் தான்வீர் கூறுகை யில்;

தென்னாபிரிக்காவில் நடந்த ஐ.பி.எல். தொடரில் பங்கேற்காதது வருத்தம் அளிக்கிறது. சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த இருபது-20 உலகக் கோப்பை தொடரில் பாகிஸ்தான் அணி சம்பி யனானது.

இதன் மூலம் பாகிஸ்தான் வீரர் களை அடுத்த ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க ஒவ்வொரு அணி உரி மையாளர்களும் அழைப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்.

இதற்கு ஐ.பி.எல். நிர்வாகமும் அனுமதி அளிக்கும் எனவே, அடுத்த ஆண்டு நடக்க இருக்கும் போட்டி களில் பாகிஸ்தான் வீரர்களை காண லாம் என நம்புகிறேன் என்றார்.

# கிளார்க்-ஹடின் அபாரம்; ஆஸி. போராட்டம்

இங்கிலாந்துடனான இரண் டாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டிஉ யில் அவுஸ்திரேலியாவுக்கு 521 ஓட்டங் கள் வெற்றி இலக்காக நிர்ணயிக் கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை லோட் ஸில் ஆரம்பமான போட்டியின் நாணய சுழற்சியில் வென்று முத லில் துடுப்பெடுத்தாடிய இங்கி லாந்து அணி முதலாவது இன் னிங்ஸில் 101.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 425 ஓட்டங்களை குவித்தது. அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்டரஸ் 161 ஓட்டங்களை பெற் றார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸை துடுப்பெடுத் தாடிய அவுஸ்திரே லிய அணி 63 ஓவர் களில் 215 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந் தது.

மைக்கெல் ஹஸி அதிக பட்ச மாக 51 ஓட்டங்களை பெற்றார். தவிர, சைமன் கட்டிச் 48 ஓட்டங் களை பெற்றதோடு கடைசி வரிசை யில் வந்த பீற்றர் சிடில் 35 ஓட்டங் களைக் குவித்தார்.

இங்கிலாந்து சார்பில் அபார மாக பந்துவீசிய ஜேம்ஸ் அன்டர் ஸன் 4 விக்கெட்டுக்களை வீழ்த் திய தோடு ஒனியொன், ஸ்ரூவட் பிரோட் ஆகியோர் முறையே 3, 2 விக்கெட்டுக்களை பதம் பார்த் தனர்.

தொடர்ந்து முதல் இன்னிங் ஸில் 210 ஓட்டங்களால் முன்னி லை வகித்த இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடி 71.2 ஓவர் களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங் களை பெற்ற நிலையில் ஆட்டத் தை இடை நிறுத்திக் கொண்டது.


விக்கெட் காப்பாளர் மெட் பிரிர் 42 பந்துகளில் 9 பவுண்டரிகளு டன் 61 ஓட்டங்களை பெற்றதோடு கொலின்வூட் 80 பந்துகளுக்கு 54 ஓட்டங்களை பெற்றார். நெதன் ஹயூரிச் 3 விக்கெட்டுக்களை யும் சிடில் இரண்டு விக்கெட்டுக் களை யும் வீழ்த்தினர்.

இதன் மூலம் 521 ஓட்டங் களை வெற்றியிலக்காக கொண்டு துடுப் பெடுத்தாடிய அவுஸ்திரே லிய அணி நேற்றைய 4ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 5 விக்கெட்டுக்களை இழ ந்து 313 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் மைக்கெல் கிளார்க் 125 ஓட்டங்களையும் பிராட் ஹடின் 80 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் 6ஆவது விக்கெட்டுக் காக 185 ஓட்டங்களை இணைப்பாட் டமாக எடுத்தனர்.

ஐந்தாவதும் இறு தியு மான நாளாட்டம் இன்றாகும்.

# மரண அறிவித்தல்



## தியாகராசா தர்மலிங்கம்

(உரிமையாளர் கலாஜோதி மில் மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.,
தலைவர், இராஜராஜேஸ்வரி (பேச்சி அம்மன்) அம்மன்
ஆலய பரிபாலன சபை நாயன்மார்கட்டு)

இலக்கம் 44/1, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா தர்மலிங்கம் நேற்று (19.07.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா -மங்கையற்கரசி ஆகி யோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பகவதிப்பிள்ளை ஆகியோரது அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், மாணிக்கவாசகர், காலஞ்சென்றவர்களான பிள்ளை யம்மா, கனகம்மா, நல்லைநாதன், பாலசுந்தரம் மற்றும் கனகசபாபதி ஆகி யோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற தர்மசோதி (முன்னாள் கணக்குப் பதிவாளர், கல்வித் திணைக்களம், அநுராதபுரம்) மற்றும் கலாநிதி மகேஸ்வரன் (Structure Management System Engineer-Australia), தர்மபாலன் (கலாஜோதி மில், நாயன்மார்கட்டு), சிவசோதி, காலஞ்சென்ற தியாகலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்த லிங்கம் (அதிபர், யா/அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயம்), லிங்கேஸ்வரி (Australia), மலர்மங்கை, ராஜகோபால் (முகாமைத்துவ உதவியாளர், பி.ப.சு.சே.பணிமனை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திலிபன் (Sales Professionl,Telstra, Australia), திவ்வியன், சுபகா, நிரூபனா, சதுமிதா ஆகியோரின் அன்புப் பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20.07.2009 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 44/1, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

(C-2876)

தகவல்:
குடும்பத்தினர்.

## சிவபூமி இல்லத்தில் நாளை கலை நிகழ்வு

(சுழிபுரம்)

சுழிபுரம் வழக்கம்பரை சிவபூமி முதியோர் இல்லத்தில் ஆடி அமாவாசையை முன்னிட்டு நாளை பிற்பகல் 2 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இல்லத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்குகின்றனர்.

(ந-5)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு ஸ்ரீ ஆதிகாளி அம்பாள் ஆலய இரதோற்சவத் திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளைய தினம் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(ந-30)

## ஈழத் தமிழருக்காக...

வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பேட்டன் போக்ஸ் (Patton Boggs) என்ற குறித்த நிறுவனம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அமெரிக்காவில் மேற்கொண்டு வரும் பிரசாரங்களுக்காக மாதாந்தம் 35ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கட்டணமாக செலுத்தப்படுகிறது.

வடபகுதி யுத்த நிலைமைகள் மற்றும் அப்பாவித் தமிழ் மக்களின் அவலம் குறித்து அமெரிக்கா குரல் கொடுக்காத வகையில் குறித்த நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளும் என இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சுமத்தப்பட்டுவரும் பல்வேறு மனித உரிமை மற்றும் யுத்த குற்றச்சாட்டுக்களை பொய்ப்பிக்கும் வகையில் அந்த நிறுவனம் அமெரிக்காவில் செயற்பட்டு வருவதாகவும் இதேபோன்றதொரு நிறுவனத்தின் உதவியை கடந்த வருடமும் இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிறவுண்ஸ்டின் ஹயாட் பார்பர் செராக் என்ற நிறுவனத்திற்கு வருடாந்தக் கட்டணமாக இலங்கை அரசாங்கம் 6 இலட்சம் அமெரிக்க டொலர்களை செலுத்துவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

உலகில் மிக முக்கியமான நாடுகளது இராஜதந்திரிகளிடம் தமது வாடிக்கையாளர்கள் தொடர்பில் நல் அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் வகையிலான பிரசார பரப்புரைகளை மேற்கொள்வதே இந்த நிறுவனங்களின் பிரதான பணியாகும்.

இலங்கைத் தூதரக அதிகாரிகளுக்கும் அமெரிக்க உயர் இராஜதந்திர அதிகாரிகளுக்குமிடையில் பேட்டன் போக்ஸ் நிறுவனம் சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவிற்கும் அமெரிக்க செனட்டர் ரிச்சர்ட் லுகர்டிற்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பினை பேட்டன் போக்ஸ் நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## ஏ-9 பாதை ஊடாக...

யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து தொடர்பான கஷ்டங்களை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்தே இந்த சொகுசு பஸ் சேவை நடத்தப்படவுள்ளது.

இதன்படி முதற்கட்டமாக 5 சொகுசு பஸ் வண்டிகள் இச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் காலப் போக்கில் கூடுதலான பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இந்த சொகுசு பஸ் சேவையின் முதல் பயணம் அடுத்த வாரம் கொழும்பில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் அமைச்சர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் டக்ளஸ் தேவானந்தா மேலும் குறிப்பிட்டார்.

(ந-5)

# இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற அனைவருக்கும் பொது மன்னிப்பு!

## அரசு ஆராய்வு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, வெலிகடை சிறைச்சாலைக்கு சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள படையிலிருந்து வெளியேறிய பலரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதை அடுத்தே இது தொடர்பாக அரசு உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

இது தொடர்பான யோசனை ஒன்றை மிலிந்த மொறகொட அரசிடம் முன்வைத்திருப்பதாகவும் அது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகளின் தலைமையிலான கூட்டமொன்றில் ஆராயப்படும் எனவும் தெரிகின்றது.

போர் நடைபெற்ற காலப் பகுதியில் சுமார் 65 ஆயிரம் பேர் படையணிகளில் இருந்து தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 2 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலர் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சரணடைபவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் என அரசு பல சந்தர்ப்பங்களில் அறிவித்திருந்த போதிலும் அரசு எதிர்பார்த்தளவுக்கு அதிகமானவர்கள் சரணடையவில்லை.

படையினரிலிருந்து தப்பிச் சென்றவர்களின் பெரும்பாலானவர்கள் தலைமறைவாகவே இருப்பதுடன், பாதாள உலகக் குழுக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இவர்களுக்கு பொது மன்னிப்பை வழங்குவதன் மூலமாக மட்டுமே இவர்கள் தவறான பாதையில் செல்வதைத் தடுத்த நிறுத்தி சமூகத்தில் அவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ள முடியும் என அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்திருக்கின்றார்.

(ந-5)

## மனோ கணேசனின்...

தொடரணி மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தின்போது தான் பயணம் செய்த ஜீப் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இருந்த போதிலும் தனது மெய்ப் பாதுகாவலர்கள் தன்மை அந்தப் பகுதியில் இருந்து அவசரமாகவும் பாதுகாப்பாகவும் வெளியேற்றிவிட்டதாகவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானை புகழ்ந்து முழக்கங்களை எழுப்பிக் கொண்டே தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் காயமடைந்தவர்களில் மூவர் பசர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணியினர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ந-5)

## ஐ.நாவின்...

எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி திடீரென தாம் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், இலங்கை அரசின் இத் தீர்மானம் தனக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி வரையில் பதவிக் காலத்தை நீடிப்பதாக ஜனாதிபதி கையொப்பமிட்ட கடிதமொன்று கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதி தமக்குக் கிடைக்கப் பெற்றதாக குறிப்பிட்டுள்ள அவர், அதன் பின்னர் அண்மையில் கிடைக்கப் பெற்ற கடிதத்தில் பணியை முடிபுறுத்திக் கொண்டு நாடு திரும்புமாறு கோரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதுவரையில் தம்முடன் தொடர்பு கொண்டு பதவி விலகுமாறு கோரவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக கடுமையாகப் போராடி இலங்கைக்கு நன்மதிப்பை ஈட்டிக் கொடுத்த தமக்கு இவ்வாறான ஓர் நிலை ஏற்படும் என கருதவில்லை எனவும், மீண்டும் தாம் பல்கலைக்கழக பேராசிரியர் பணியைத் தொடர உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ந-5)

LAVA HOSPITAL
75,TEMPLE ROAD, JAFFNA
(ICRC சந்தி அருகாமையில்), T.P.:- 021 222 4333
★ சத்திரசிகிச்சை நிபுணர்
தினமும்: காலை 7.00 மணி
★ பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர்கள்
வியாழன் பி.ப.4.00 மணி, திங்கள் பி.ப.1.00 மணி
★ பொது வைத்திய நிபுணர்
வியாழன் பி.ப.4.00 மணி
★ பற்சிகிச்சை கிளினிக் –தினமும் பி.ப. 4.00 மணி.
SCAN, ECG இரத்த, சல பரிசோதனைகள்
No: 151 KANNATHIDDY ROAD, 021 2227251
71, SIVAPIRAGASAM ROAD, VANNARPONNAI
90/7, Potpathy Road, Kokuvil

தேவை
எமது காமன்ஸுக்கு
✶ தையல் தெரிந்த பெண் பிள்ளைகள்
✶ கணனி இயக்குநர்கள் (கணக்கு பதிவுகள் மேற்கொள்ளக் கூடிய பெண் பிள்ளைகள்) தேவை.
தொடர்புக்கு:-
றொசானி காமன்ஸ்
263/1,இராஜகாரியர் லேன், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.
கிளை:- சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(2983)

போலிகள் எச்சரிக்கை
ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் வரதராஜன்
போலியானது
சரியானது
யாழ்.நகரில்:
1.பொன்னான மேனியும்
2.பொலிவான கூந்தலையும் தந்து
3.சகல ரோக நிவாரணியாகத் திகழும்
சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில் போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தை தடுக்க இன்றிலிருந்து தைலப் பாட்டிலின் மேல் மூடி கண்ணைக்கவரும் வர்ண மூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளைக் களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே. பிளேன் மூடித் தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும் போது வர்ண மூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரி பார்த்து வாங்குங்கள்.
குறிப்பு:-போலிகளின் நடமாட்டம் வடமராட்சிப் பகுதியில் அதிகமாக உள்ளதால் வடமராட்சி மக்கள் இதைக் கருத்தில்கொண்டு கூடிய கவனம் எடுக்கவும்.
Manufactured By: SITHARA PRODUCTS Puttalam Road, Chilaw. (Reg.No.:6382)AR/PR/N0.:228
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்: சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 2567
(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அண்மையில்)

PC SYSTEMS
Total IT Solution Providers
மொபிடெல் சிம்
மொபிடெல் Reload சிம்
(உங்கள் கடை / நிறுவனத்தின் பெயரில் பதிவுசெய்து தரப்படும்)
மொபிடெல் உபகார சிம்
மிகக்குறைந்த விலையில் கையடக்கத்தொலைபேசி
எம்மிடம் பெற்றுக்கொள்ளமுடியும்.
Sri Lanka Telecom Mobitel We Care. Always.
Sub Dealer Mobitel
ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். 0718034198 0712674055
இல.24, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். 0718034198 0712674055

பிறீமா கோதுமை மா விநியோகம்
சகல பேக்கறிகள், பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பலசரக்கு கடைகளுக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பிறீமா கோதுமை மா விநியோகம் செய்யப்படும். போக்குவரத்து வசதி இலவசமாக செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:-
சிற்றி ஹாட்வெயார்&ஸ்ரோர் 55, 57,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 2901
களஞ்சியம் இல.68, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி சந்தி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 4466
(2973)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.